Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 6, 2024

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 06, 2024 | ஒளி: 10 கதிர்: 109 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## “அரசியல் பக்கச்சார்பின் அடிப்படையில் முதலீட்டு வாய்ப்புகள் வழங்கப்படாது”

- புதிதாக ஐந்து முதலீட்டு வலயங்களை அடுத்த வருடத்தில் ஆரம்பிக்க பேச்சு
- நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச்சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவோர் அரசியல் அழுத்தங்களும் இனிமேல் இடம்பெறாது. நாட்டுக்கு உகந்த தூய்மையான முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முழுச் சுதந்திரத்தை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் வியாழக்கிழமை (05) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “வரி செலுத்த இலகு வழி வரும்”

மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து வரிப் பணத்தை செலுத்தி வருகிறார்கள். இந்த வரி செலுத்தும் நடவடிக்கையை மேலும் இலகுபடுத்துவதற்காக வரி செலுத்துவோர் தங்களின் வீடுகளில் இருந்தவாறே வரி செலுத்த தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி வாடகைக் கட்டிடங்களில் இருக்கும் அனைத்து அமைச்சுக்களின் நிறுவனங்களையும் அரச கட்டிடங்களின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குவாக்குப்பதிவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வரி செலுத்தாதவர்கள் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதற்கு இறுதி திகதி ஒன்றை நாங்கள் அறிமுகப்படுத்தி இருந்தோம்.

தொடர்ச்சி P2

## “கல்முனை பிரதேச செயலகம் குறித்து கலந்துரையாடவும்”



கல்முனை பிரதேச செயலகம் தொடர்பில் அந்த பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினை இருப்பதால் கலந்துரையாடி இந்த பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்பது தொடர்பில் ஒரு முடிவுக்கு வர முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு வாக்குப்பதிவு மீதான

தொடர்ச்சி P2

## “ஆடையுடன் பயணித்தார் ரணில்: ஆடையின்றி அனுர பயணிக்கிறார்”

**விவசாய முறைமை தவறு என்றால் கூட்டு விவசாய முறைமைக்கு செல்ல வேண்டும்**

அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆடையுடன் தொங்கு பாலத்தில் பயணித்தார் . தற்போதைய ஜனாதிபதி ஆடையில்லாமல் தொங்கு பாலத்தில் பயணிக்கின்றார் இதுதான் இவர்களின் மாற்றம் என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான கபீர் ஹாசிம், வணிக கடன் தொடர்பான ஒப்பந்தத்தில் அரசாங்கம் ஆடை அணிந்து கொண்டா கைச்சாத்திட போகிறது எனவும் கேள்வி



தொடர்ச்சி P2



## இலங்கை தமிழரசுக் கட்சி எம்.பிக்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி (ITAK) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு புதன்கிழமை (04) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நீண்ட காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம்கொடுத்து வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்கமளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகநாதன் குகதாசன், சாணக்கியன் ராசமாணிக்கம், ஞானமுத்து ஸ்ரீநேசன்,கவீந்திரன் கோடீஸ்வரன், இளையதம்பி சிறிநாத்,துரைராசா ரவிகரன் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

## சிபார்சித்தவர்களை விசாரிப்பீர்களா?



கடந்த அரசாங்கத்தில் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்ட 361 மதுபானசாலை அனுமதிகளின் உரிமையாளர்கள்,சிபார்சு செய்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுமா என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யான இரா. சாணக்கியன் அரசிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) ஒழுங்கு பிரச்சினை எழுப்பிய இந்தக் கேள்வியை கேட்ட இரா.சாணக்கியன் எம்.பி. மேலும் உரையாற்றுகையில்,

தொடர்ச்சி P2

## “மௌலானாவின் சாட்சியங்களை ஆராய்ந்தால் உண்மைகள் வெளிவரும்”

**நீதிமன்றம் 3 தடவைகள் அளித்த தீர்ப்புகள் அமுல்படுத்தப்படாத நிலையில் உள்ளன**



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆசாத் மௌலானா என்பவர் தெரிவித்த சாட்சியங்கள் ஆராயப்படுமானால் உண்மைக் குற்றவாளிகளை,சூத்திரதாரிகளை கண்டுகொள்ள முடியும் எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான ஸ்ரீநேசன், மயிலந்தனை, மாதவனையில் அத்துமீறிய குடியேற்றங்கள்

தொடர்ச்சி P2

## “பெரும்பான்மை உள்ளதால் தன்னிச்சையாக செயற்படுகிறது”

**உங்களின் குறைகளை திருத்திக் கொள்ள வேண்டும்**

குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்படாத நிலையில் தான் கணக்கு வாக்கு ப்பதிவை முன்வைக்க மு டியும்.அரச நிதி முகாமைத்துவ சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் அந்த சட்டத்தின் ஏற்பாடுகள் எதுவும் பின்ப ற்றப்படவில்லை. தனக்கு பெரும்பான்மை உள்ளதால் அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான தயாசிறி ஜயசேகர குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றம் வியாழக்கிழமை (05) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் அசோகா ரன்வல தலைமையில் கூடியது. அதன்போது எழுந்த தயாசிறி ஜயசேகர எம்.பி. சிறப்புரிமை மீறல் பிரச்சினையை எழுப்பி உரையாற்ற சபாநாயகரிடம் அனுமதி கோரினார்.

தொடர்ச்சி P2



## “குரங்குகளை குற்றவாளிகளாக்க வேண்டாம்”

குரங்குகள் தேங்காய்களை உண்பதால் தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இந்த அரசு கூறுகிறது . அவ்வாறானால் கடந்த ஆண்டு நாட்டில் குரங்குகள் வாழவில்லையா? எனவே குரங்குகளை குற்றவாளிகளாக்க வேண்டாம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி.யான டி.வி.சானக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்ற கணக்கு வாக்குப்பதிவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில், நாடு முழுவதும் கடந்த வாரம் ஏற்பட்ட மழையுடனான காலநிலையால் பெருமளவிலான விவசாய நிலங்கள் முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு 40 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குவதாக அரசாங்கம் கூறுவதை ஏற்றுக் கொள்ள




முடியாது. விவசாயிகள் அதிகளவில் செலவழித்துள்ள நிலையில் 40 ஆயிரம் ரூபாய் வழங்குவது அநீதி. விவசாயிகளுக்கு வழங்கப்படும் நஷ்டஈடு தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் வினவிய போது 2012,2014 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறு தான் நஷ்டஈடு வழங்கப்பட்டது’ என்று பதிலளிக்கின்றார்.

தொடர்ச்சி P2

## மொட்டுவின் நிர்வாக செயலாளருக்கு பிணை

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேராவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டதாக ணுகா



பெரேரா மீது குற்றம் சுமத்தப்பட்டு, அந்தக் குற்றச்சாட்டின் பேரில், கொடிக்காவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து, வியாழக்கிழமை (05) காலை கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# முதலீட்டு வாய்ப்புகள் வழங்கப்படாது”

அரசியல் ஸ்திரத்தன்மையை போலவே நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அது தொடர்பிலான பாரிய பொறுப்பு முதலீட்டுச் சபைக்கு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

முதலீட்டுச் சபைக்கு இருக்கும் பொறுப்பை சரியாக நிறைவேற்ற அர்ப்பணிக்க வேண்டும் என்றும், நாட்டுக்கு உகந்த முதலீடுகளை கொண்டு வருவதற்கு முதலீட்டுச் சபைக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி இதன் போது உறுதியளித்தார்.

முதலீட்டுச் சபையின் செயல் திறனை அதிகரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பெற்றுக்கொடுப்பதற்கு, புதிதாக ஐந்து முதலீட்டு வலயங்களை அடுத்த வருடத்தில் ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்தி இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரகோன் உள்ளிட்ட அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டனர்.

# சிபார்சித்தவர்களை விசாரிப்பீர்களா?

கடந்த அரசாங்கத்தில் 361 மதுபானசாலைகளுக்கான அனுமதிகளை இலஞ்சமாக பெற்றவர்களின் விவரங்களை அரசு சபையில் சமர்ப்பித்தது பாராட்டுக்குரியது. அதேவேளை இந்த மதுபானசாலைகளின் உரிமையாளர்கள், இவற்றுக்கான அனுமதிகளுக்கான சிபார்சு செய்தவர்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்துமா?அத்துடன் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்ட இந்த மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை அரசு இரத்து செய்யுமா?

இந்த 361 மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் தொடர்பில் அரசு விளக்கமளிக்க வேண்டும் என சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்கவிடம் கோரினார். எனினும் அரசு தரப்பில் பதில் வழங்கப்படவில்லை.

# “பெரும்பான்மை உள்ளதால் தன்னிச்சையாக செயற்படுகிறது”

எனினும் நீங்கள் முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினை வியாழக்கிழமை (05) காலை 9.25 மணியள வில்தான் கிடைத்தது அத்துடன் அதில் திகதியும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே இவ்விடயம் தொடர்பில் உங்களிடம் கலந்துரையாட இருந்தேன் என்றார்.

இதற்கு பதிலளித்த தயாசிறி ஜயசேகர எம்.பி., பாராளுமன்ற அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அதாவது 9.30 மணிக்கு முன்னர் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைக்கலாம் என்று கூறிவிட்டு கணக்கு வாக்குப் பதிவை முன்வைக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன .

அதாவது குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்படாத பட்சத்தில் தான் கணக்கு வாக்கு ப்பதிவை முன்வைக்க முடியும். அரச நிதி முகாமைத்துவ சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் அந்த சட்டத்தின் ஏற்பாடுகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. ஆகவே குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதற்கு எமக்கு இடமளித்து . உங்களின் குறைகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

# ஆராய்ந்தால் உண்மைகள் வெளிவரும்

தொடர்பில் நீதிமன்றம் 3 தடவைகள் அளித்த தீர்ப்புகள் அமுல்படுத்தப்படாத நிலையில் இந்த ஆட்சியில் அங்கு சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்ற கணக்கு வாக்குப்பதிவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் சட்டவாட்சியை பலப்படுத்த வேண்டும் என கூறியுள்ளார்.

ஆகவே சட்டவாட்சி இங்கு பலவீனமாக இருக்கிறது என்பதனை அவர் உணர்ந்துள்ளார். சட்டவாட்சி பலவீனமாக இருந்த காரணத்தினால் பல குற்றச்செயல்கள் நடந்துள்ளன உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் கூட சட்டவாட்சியின் பலவீனத்தினால்தான் நடந்தது.

கடந்த காலத்தை எடுத்துக்கொண்டால் அதாவது மஹிந்த ராஜபக்ச ஆட்சி செய்த 2005 க்கும் 2015 க்கும் இடைப்பட்ட காலத்தை எடுத்துக்கொண்டால் அக்காலத்திற்குள் நடந்த படுகொலைகளைப்பற்றி சொல்லுவதாக இருந்தால் ஒருநாள் போதாது. 40 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். தமிழ் தேசியக்கூட்டமைப்பை அழிப்பதற்காக ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைசெய்யப்பட்டார் ரவிராஜ், சந்திரநேரு சிவநேசன் போன்ற எமது எம்.பி.க்கள் படுகொலைசெய்யப்பட்டனர். கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தரான் ரவீந்திரநாத் படுகொலைசெய்யப்பட்டார் சிவராம் நடேசன் ஏக்னலிகொட, லசந்த என்ற ஊடகவியலார்கள் படுகொலை செய்யப்பட்டனர் .

ஆனால் இவற்றுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. தண்டனைவழங்கப்படவில்லை. இதனால் நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதா என்ற கேள்வி காணப்பட்டது. பணநாயகமே நாட்டை ஆட்சி செய்த்து. வீதிகள் எல்லாம் பிணங்கள் குவிந்து காணப்பட்டன.

எனவே பாரிய குற்றங்களை இழைத்து விட்டு கௌரவர்களாக ,தண்டிக்கப்படாதவர்களாக உலாவிவந்த அந்தக் குற்றவாளிகள் இந்த ஆட்சியில் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு முறையான தண்டனைகள் வழங்கப்படுவதன் மூலம் சட்டவாட்சியையோ பலப்படுத்த வேண்டும் .இவ்வாறு குற்றங்கள் புரிந்தவர்கள் ஒரு காலத்தில் இந்த பாராளுமன்றத்தைக்கூட அலங்கரித்திருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக ஆசாத் மௌலானா என்பவர் மிகவும் விபரமாக பல சாட்சியங்களை கூறியுள்ளார். அந்த சாட்சியங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அது சரியாக ஆராயப்படுமாக இருந்தால் குண்டுத்தாக்குதலுக்குரிய சூத்திரதாரிகள் யார் என்பதனை கண்டுகொள்ள முடியும் என்றார்.

# “குரங்குகளை குற்றவாளிகளாக்க வேண்டாம்”

ஒரு கையொப்பத்தின் ஊடாக அனைத்தையும் மாற்றுவதாக குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று ஏற்கனவே நடைமுறைப்படுத்திய தீர்மானங்களை செயல்படுத்துவதாக கூறுகிறார்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளில் மாபியாக்களின் செயற்பாடு கட்டுப்படுத்த முடியாத அளவில் உள்ளது. தேங்காய்க்கு கூட நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.குரங்குகள் தேங்காய்களை உண்பதால் தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இந்த அரசு கூறுகிறது . அவ்வாறானால் கடந்த ஆண்டு நாட்டில் குரங்குகள் வாழவில்லையா? எனவே குரங்குகளை குற்றவாளிகளாக்க வேண்டாம். தேங்காய்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதுவே உண்மை. வர்த்தக மாபியாக்களை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என்றார்.

# ஆடையின்றி அனுர...

எழுப்பினார் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்ற கணக்கு வாக்குப்பதிவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி மெழுப்பிய அவர் மேலும் உரையாற்றுகையில், தேசிய மக்கள் சக்தி சார்பில் இம்முறை பாராளுமன்றத்துக்கு பெருமளவிலான கலாநிதிகள், பேராசிரியர்கள், பட்டதாரிகள் மற்றும் தொழிற்றுறை நிபுணர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் 74 ஆண்டு கால அரசியல் கட்டமைப்பை விமர்சித்துக் கொண்டு இலவச கல்வியின் ஊடாக பயனடைந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகத்தில் முறைமை மாற்றம் எதையும் எதிர்பார்க்க முடியவில்லை. பாரம்பரிய விவசாய முறைமை தவறு என்றால் கூட்டு விவசாய முறைமைக்கு செல்ல வேண்டும். அதேபோல் கைத்தொழில் துறை தவறு என்றால் அரச கட்டமைப்புடனான கைத்தொழில் துறைக்கு செல்ல வேண்டும்.

ஜனாதிபதியின் கொள்கை உரையிலும், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள கணக்கு வாக்கு பதிவில் மாற்றம் ஏதும் கிடையாது. நாட்டில் முறைமை ஏதும் மாற்றமடையவில்லை. அநுரவே மாற்றமடைந்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் இருந்து விலகுவதாக குறிப்பிட்டவர்கள் இன்று செயற்திட்டத்தின் உள்ளடக்கத்தை ஆராயாமலே செயற்திட்டங்களை அமுல்படுத்துவதாக குறிப்பிடுகிறார்கள்.

# “கல்முனை பிரதேச செயலகம் குறித்து கலந்துரையாடவும்”

விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் . இக் கலந்துரையாடலுக்கு பின்னரும் பாராளுமன்றத்திலும் அது தொடர்பான விடயங்கள் பேசப்பட்டன . குறிப்பாக கல்முனை பிரதேச செயலக தொகுதி தொடர்பான பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி தலையிடுவதாக வாக்குறுதி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலகம் தொடர்பில் அந்த பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினையுள்ளது. எனவே இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடுவோம். கலந்துரையாடல் ஊடாக இந்த பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும். இந்த விடயம் தொடர்பில் சாணக்கியன், சத்தியலிங்கம் எம்.பிக்களுடன் கலந்துரையாடினேன். எமதுமக்களின் பிரச்சினை தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளேன்.. அதனால் இவ்வாறான பிரச்சினைகள் முரண்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக்கொள்வோம்.

அத்துடன் இந்த பிரதேச செயலகம் தொடர்பில் தற்போது வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக எல்லை நிர்ணயம் தொடர்பாக பல குழுக்களும் இருக்கின்றன. எனவே இந்த விடயங்கள் அனைத்தையும் கருத்திற்கொண்டு ஒரு தீர்மானத்துக்கு வருவோம் என்றார்.

# “வரி செலுத்த...

அந்த காலப்பகுதியில் வரி செலுத்துவதற்கு மக்கள் வரிசையில் நின்றனர் மக்கள் வரி செலுத்த தயாராக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் செலுத்தும் வரி பணத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் என்ன என்பது தொடர்பில் அவர்களுக்கு தெரியாமல் இருந்தது. அதனால் வரிசெலுத்துவோர் அதனை செலுத்துவதை தவிர்த்து வந்தார்கள்.

ஆனால் தற்போது மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து வரி பணத்தை செலுத்தி வருகிறார்கள். இந்த வரி செலுத்தும் நடவடிக்கையை மேலும் இலகுபடுத்துவதற்காக வரி செலுத்துவோர் தங்களின் வீடுகளில் இருந்தவாறே வரி செலுத்துவதற்கு தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் மக்களின் வரி பணத்தை நாங்கள் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். குறிப்பான ஜனாதிபதியின் பதவி ஏற்கும் நிகழ்வு, அமைச்சர்களின் பதவி ஏற்கும் நிகழ்வு மிகவும் எளிமையாக இடம்பெற்றது. இதுவே கடந்த அரசாங்கமாக இருந்தால், மக்களின் வரிப் பணத்தை இதற்காக பாரியளவில் செலவழித்திருப்பார்கள். அதேபோன்று அமைச்சுக்களின் அதிகமான நிறுவனங்கள் வாடகை கட்டிடங்களிலேயே இருந்துள்ளன. அதற்காக பாரியளவில் வாடகை செலுத்தப்பட்டு வந்துள்ளன.

குறிப்பாக எனது அமைச்சுக்கு கீழ் இருக்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை கட்டிடத்தின் மாத வாடகையாக 50 இலட்சம் ரூபா செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதனால் வாடகைக் கட்டிடங்களில் இருக்கும் அனைத்து அமைச்சுக்களின் நிறுவனங்களையும் அரச கட்டிடங்களின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மேலும் சார்ள்ஸ் எண்ட் டிபல் சட்ட நிறுவனத்தின் சட்டத்தரணிகளுக்கு பாரியளவில் கட்டணம் செலுத்துவதாக எங்கள் மீது குற்றம் சாட்டுகின்றனர் . சர்வதேச நாணய நிதியத்தின் சட்டத்தரணிகளாக சார்ள்ஸ் என்ட் டிபல் சட்ட நிறுவனத்தின் சட்டத்த ரணிகளை இணைத்து கொண்டது நாங்கள் அல்ல. ஆனால் அந்த நிறுவனத்துக்கு கட்டணம் செலுத்துவதற்கு சட்ட ரீதியில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். கடந்த அரசாங்கம் செய்த சில பாவங்களை விரும்பாவிட்டாலும் நாங்களும் சுமக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்றார்.

இலங்கை பல்கலைக் கழக மாணவர்கள்

# இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியை பாராட்டுகின்றனர்




இந்திய அரசாங்கத்தின் விசேட நிதி உதவியை பாராட்டும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் பீடத்தினைச் சேர்ந்த மாணவர் ஒருவர், “இவ்வாறு வழங்கப்படும் மாதாந்த நன்கொடை உதவியானது நிதி ரீதியான அழுத்தங்களை நிவர்த்தி செய்வதில் மிகுந்த பயனுள்ளதாகவிருக்கின்ற அதேவேளை, எனது கல்வியில் அதிக கவனம் செலுத்துவதற்கும் இடமளிக்கின்றது. அத்துடன் இந்த நிதி உதவியானது, நிதி ரீதியான சுமைகள் குறித்து கவனம் செலுத்தாமல், சீரான வருகையினைப் பேணி எனது கல்வியில் கவனம் செலுத்தவும் வழிவகுக்கின்றது. எனது கல்வி ரீதியான செயல்திறனுக்கும் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கும் இந்த ஆதரவு கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றது”, எனத் தெரிவித்திருந்தார்.

அதேபோல, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான பிரிவினைச் சேர்ந்த மாணவர் ஒருவர் இந்த உதவித் திட்டங்கள் குறித்து தெரிவிக்கும்போது, ‘இந்த உதவி மிகவும் பயனுள்ளதாகும். மாதாந்த கல்விச் செலவீனத்தை இதனால் ஈடுசெய்யமுடிகின்றது. அத்துடன் எனது கல்வித்தேவைக்கான நூல்களை கொள்வனவு செய்தல், நிழற்பிரதி எடுத்தல், அச்சு செலவீனங்கள் மற்றும் எனது உணவுத் தேவைகள் போன்ற செலவீனங்களுக்கு இந்த நன்கொடை உதவி ஆதரவாக உள்ளது”, எனக் குறிப்பிட்டார். மேலும், கலைப் பீடத்தில் கலாசார சுற்றுலாத்துறை குறித்து பயின்றுவரும் மற்றொரு மாணவர், தனது கள விஜயங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு இந்த உதவி ஆதரவளிப்பதாக குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விசேட நிதியுதவித் திட்டத்திற்காக பொருளாதார ரீதியாக ஆதரவு தேவைப்படும் குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்தும் அதேபோல பொருளாதார ரீதியாக ஆதரவு தேவைப்படும் குடும்பங்களைச் சேர்ந்த ஏனைய 100 மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்தும் இவ்வருடம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வெங்காய விலையும் சடுதியாக எகிறியது

ஒரு கிலோ கிராம் இந்திய வெங்காயத்தின் விலை 500 முதல் 550 ரூபா வரை இன்று (05) பிற்பகல் வரை அதிகரித்துள்ளதாகவும், தேங்காய் ஒன்றின் விலை 180 முதல் 230 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான் பெரிய வெங்காயம் மற்றும் ஏனைய பெரிய வெங்காயத்தின் விலை கிலோ கிராம் ஒன்றுக்கு 400 முதல் 450 ரூபாய் வரை உள்ளதாகவும், வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் இந்திய வெங்காயம் இருப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், ஒரு கிலோ கிராம் வெங்காயத்தின் மொத்த விலை 400 ரூபாயாக உயர்ந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன், 40 ரூபாய் முதல், 60 ரூபாய் வரை விற்பனையான, ஒரு சிறிய குவியல் தேங்காய், 180 ரூபாயாக மாறி, மூன்று மடங்கு விலை உயர்ந்துள்ளதாக, தேங்காய் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி முதல் தற்போது வரை

# 529 மீனவர்கள் கைது

தமிழக மீனவர்களின் இரண்டு விசைப்படகுகளைக் கைப்பற்றி அதிலிருந்த 14 மீனவர்களை இலங்கை கடற்படையினர் வியாழக்கிழமை (05) கைது செய்தனர்.

இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 500 விசைப்படகுகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் புதன்கிழமை (04) கடலுக்குச் சென்றனர். வியாழக்கிழமை (05) அதிகாலை கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த பிரிட்டோ, மெஜோ ஆகியோருக்குச் சொந்தமான 2 விசைப்படகுகளை எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.

தொடர்ந்து 2 படகுகளிலிருந்து ரிபாக்சன், ராஜ பிரபு, அரவிந்த் , ராபின்ஸ்டன், முனீஸ்வரன், பிரசாந்த், ஆரோக்கியம், பெட்ரிக் நாதன், யோபு, ஜான் இம்மரசன், அருள் பிரிட்சன், நிஷாத், வினித், அந்தோணி லிஸ்பன் ஆகிய 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

முன்னதாக, கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 67 தமிழக மீனவர்களின் படகுகளை சிறைப்பிடித்து 529 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



சுங்கத் திணைக்கள இந்து ஊழியர்

## சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

இலங்கை சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் 2024ஆம் ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டம் சுங்கத் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தின் 11ம் மாடியிலுள்ள மண்டபத்தில் சனிக்கிழமை (07) மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து 2024ம் ஆண்டு ஓய்வுபெற்ற சுங்க அதிகாரிகளுக்கான கௌரவிப்பும் தொடர்ந்து கவியரங்கமும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில், சகல உறுப்பினர்களும் குடும்ப சகிதம் தவறாது கலந்துகொள்வதுடன் அதனைத் தொடர்ந்து சுங்கத் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தின் 9 ஆம் மாடியிலுள்ள மன்றத்தில் நடைபெறவுள்ள விருந்துபசாரத்திலும் பங்கேற்குமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

## வாகன விபத்தில் ஒருவர் பலி: மூவர் படுகாயம்

■ கனகராசா சரவணன்



வாழைச்சேனை, பொலன்னறுவை வீதியிலுள்ள மியான்குளம் பகுதியில் லொறியும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 3 பேர் படுகாயமடைந்த சம்பவம் புதன்கிழமை (4) இரவு இடம்பெற்றுள்ளது.

புனானை ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த (65) வயதுடைய கனகசூரியன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் புனானை ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹந்தானையில்

## வழி தவறிய 10 மாணவர்கள் மீட்பு

கண்டி ஹந்தானை மலையில் வழி தவறி காணாமல் போன பாடசாலை மாணவர்கள் 10 பேர் அடங்கிய குழுவொன்று வியாழக்கிழமை (05) காலை பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கிரிபத்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 16 முதல் 17 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் குழுவொன்று புதன்கிழமை (04) காலை பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சரசவிகம பிரதேசத்தில் இருந்து ஹந்தானை மலைக்கு சுற்றுலா சென்றுள்ளனர். மலையில் ஏறிக்கொண்டிருந்த போது கடும் பனிமூட்டம் மற்றும் குளிர் காரணமாக வழி தவறி காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்கள் குழு இது தொடர்பில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் வழங்கியுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அந்த மாணவர்கைளை மீட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



இஸ்ரேல் யுத்ததால் பாதிக்கப்பட்ட

## 27 பேர் நாடு திரும்பினர்

■ டி.கே.பி.கபில

மத்திய கிழக்கில் லெபனான்-இஸ்ரேல் யுத்தம் காரணமாக லெபனானில் தங்கியிருந்த 27 இலங்கையர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தை புதன்கிழமை (04) வந்தடைந்திருந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவர்களில் 05 சிறு பிள்ளைகள், 03 பெண்கள் மற்றும் 19 ஆண்கள் அடங்குவர்.

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, லெபனானில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இணைந்து இந்த இலங்கையர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இவ்வாறே கடந்த 11/06, 11/12, 11/28, 12/01 ஆகிய திகதிகளில் இலங்கையர்கள் குழுவொன்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அதன்படி, லெபனானில் தங்கியிருந்த 53 இலங்கையர்கள் இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த 27 இலங்கையர்களும் எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமானமான EK-648 இல் துபாயிலிருந்து புதன்கிழமை (04) இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.





## சிறுத்தை தாக்கியதில் தொழிலாளி காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தோட்டத் தொழிலாளி ஒருவரை சிறுத்தை தாக்கியதில் அப்பெண் படுகாயமடைந்த நிலையில் பொகவந்தலாவை வைத்தியசாலையில் (05) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோரா தோட்டத்தில் உள்ள தோட்ட தொழிலாளர்கள் குழுவொன்று போபத்தலாவ காப்புக்காட்டுக்கு அருகில் உள்ள தேயிலை தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது நாயை வேட்டையாட வந்த சிறுத்தை நாய் மீது தாக்குதல் நடத்தியதோடு 53 வயதுடைய பெண் தொழிலாளி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது.




தாக்குதலில் காயமடைந்த பெண்ணின் உடல் முழுவதும் சிறுத்தையின் நகங்கள் காணப்படுவதால், அவர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார் என பொகவந்தலாவ வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

## சுரங்கத்தில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

■ பாலித ஆரியவங்ச

தெமோதர புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள 42வது சுரங்கத்தில் இருந்து வியாழக்கிழமை (05) காலை சடலமொன்று மீட்கப்பட்டதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

தெமோதர ரயில் நிலையத்தின் கண்காணிப்பு பிரிவினர், சடலத்தை கண்டதும், ரயில் நிலைய அதிபருக்குத் தகவல் தெரிவித்தனர்.



உயிரிழந்தவர் தெமோதர தொழிற்சாலைத் பிரிவைச் சேர்ந்த ராமகிருஸ்ணன் கிருஷ்ணகுமார் (வயது 27) என அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை (04) இரவு அவர் வீட்டில் இல்லை என பிரதேசவாசிகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். மரணத்திற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பதுடன் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உணவு ஒவ்வாமையால் 50 பேர் பாதிப்பு

■ டிகே.ஜி கபில

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் சுமார் 50 ஊழியர்கள், தொழிற்சாலை வழங்கிய காலை உணவை உண்ட பின்னர், வியாழக்கிழமை (05) காலை 09.00 மணியளவில் சுகவீனமடைந்து நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்த ஊழியர்கள் தற்போது நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் வார்டு இலக்கம் 02 மற்றும் இலக்கம் 03 இல் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நோய்வாய்ப்பட்ட ஊழியர்களுக்கு மயக்கம், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. கட்டுநாயக்க பொலிஸார், நீர்கொழும்பு வைத்தியசாலை பொலிஸார், சீதுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## முதலாவது ஆண்டு விழா

பதுளை, ரிதிபானயில் அமைந்துள்ள பேச்சி அம்மன் தேவஸ்தான வாக்தேவி அறநெறி பாடசாலையின் முதலாவது ஆண்டு விழா சுவாமி ருத்ரா நந்த சரஸ்வதியின் தலைமையில் தேவஸ்தான வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின், பிரதம அதிதிகளாக சிவயோகி சுவாமி சண்முகம் தனசேகரன் ஜி, பேச்சியம்மன் ஆலய தர்மகர்த்தா ரஜினிகாந்த், தேவஸ்தான பிரதம குருக்கள் ஆர்.பி.சாமி மற்றும் இந்து கலாசார திணைக்களத்தின் உத்தியோகத்தர் கலந்து கொண்டதோடு மாணவர்களின் ஆன்மீக, கலை நிகழ்வுகளும், சிறப்பு சொற்பொழிவுகளும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

ஆறுமுகன் புவியரசன்















# தலைகளை வறுமையில் இருந்து காப்பாற்றுமா தலை

நலன்புரி காரணமாக நமது நாட்டின் வரவு-செலவுத்திட்ட( பட்ஜெட்) பற்றாக்குறை இடைவெளி மிகவும் அதிகமாக உள்ளது. இலங்கையில் இலவசக் கல்வி, இலவச சுகாதார வசதிகள், 1970களுக்கு முன்னும் பின்னும் இருந்த அரிசிப் புத்தகம், இலவச திரிபோஷா உட்பட பலதரப்பட்ட நலத்திட்டங்கள் உள்ளன. தற்போது அஸ்வெசும உள்ளிட்ட நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் எப்போதும் நமது நலன்புரி அமைப்புகளுக்கு எதிராகவே உள்ளன. அந்த நிறுவனங்கள், பொதுநலத்தால் வறுமையை ஒழிக்க முடியாது என்றும், வறுமையை ஒழிக்க நாட்டின் உற்பத்தியை மேம்படுத்த வேண்டும் என்றும் கருதுகின்றன.

ஆனால் உற்பத்தியை மேம்படுத்த, மக்கள் தலை நிமிர்ந்து நிற்கும் தைரியம் வேண்டும். 1970 மற்றும் 80 களில் இந்த நாட்டில் இருந்த தொழிலாளி வர்க்கத்திற்கும் 19 ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. இங்கிலாந்தில் உழைக்கும் வர்க்கம் மூன்று வேளையும் உருளைக்கிழங்கை சாப்பிட்டது.

1970 மற்றும் 80 களில், இந்த நாட்டில் ஏராளமான உழைக்கும் மக்கள் மூன்று வேளையும் ரொட்டி மற்றும் பருப்புகளை சாப்பிட்டனர். கூடுதலாக, அவர்கள் நாள் முழுவதும் சுமார் 20 கப் சாதாரண தேநீர் குடித்தார்கள். அதோடு உழைக்கும் ஒவ்வொரு நொடியும் அவர்கள் வாயில் பீடி. மாலையில் உடல் சோர்வுக்கு ஒரு துளி மது அருந்தினர்.

ஆனால் அன்றைய உழைக்கும் வர்க்கம் இன்று இல்லை. இன்று ஒவ்வொரு தொழிலாளியிடம் அலைபேசி உள்ளது. தங்கள் செல்வத்திற்கேற்ப தேனை அருந்துவார்கள். அவரும் சிகரெட் புகைப்பார். வறுமை அப்படியே இருந்தது.

ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதாரத்தில், யாருக்கும் பணம் கொடுக்கப்படக்கூடாது. அரசிடமிருந்து வறுமைக் கொடுப்பனவு பெறுபவர்கள் இருப்பின் இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவினர் சாலையின் இருபுறமும் பள்ளம் தோண்டவும், மற்றொரு குழுவினர் பள்ளங்களை மூடவும் அனுமதிக்க வேண்டும் பேராசிரியர் டட்லி சியர்ஸ் தெரிவித்திருந்தார்.

ஜனசவியா மக்கள் சாலையில் வேலை செய்ய வேண்டியிருந்தது. இவர்களுக்கு சாலையை மண்வாரி போடுவது, சாலையை துடைப்பது, ரயில் தண்டவாளத்தை தூர்வாருவது போன்ற பல்வேறு பணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்யாமல், தண்டவாளத்தில் அமர்ந்து வெற்றிலை பாக்கு சாப்பிட்டு, ப்ளேன் டீ குடித்துக் கொண்டிருந்தனர். இலங்கையர்களுக்கு ஒழுக்கம் இல்லாததே இதற்குக் காரணம். இந்த ஒழுக்கமின்மை இன்னும் சில அரசு அலுவலகங்களுக்குச் சென்றால் தெரியும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த இயக்கத்தை மறுசீரமைக்கும் என்பது எங்கள் நம்பிக்கை. இந்தத் தொழிலைக் கையிலெடுத்த சில அதிகாரிகளுக்கு ஏழ்மை, செல்வம் பற்றி அதிகம் தெரியாது. பல வருடங்களில் கொஞ்சம் கொஞ்சமாக கட்டப்பட்ட வீட்டின் வரவேற்பறையில் உள்ள ஓடுகளை ஒரு ஏழைத் தொட்டால், அந்த மனிதன் பணக்காரன் என்று தீர்மானிக்கப்பட்டு துண்டிக்கப்படுகிறான்.

இந்த அரசாங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் சுமார் 75 சதவீதமான பேருக்கு வறுமையின் அர்த்தம் தெரியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஜனாதிபதி அனுர திசாநாயக்கவுக்கு நன்றாகத் தெரியும் என்பது ஒரு சோகமான அனுபவம். தலையை வறுமையில் இருந்து காப்பாற்றும் தலை.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கபூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிபாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 29

# போரின் பின்னரான அபிவிருத்தி அரசியல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவானது முழுமையான இராணுவ வெற்றியின் மூலம் சாத்தியப்பட்டது. இது விடுதலைப் புலிகள் களத்தில் இருந்து முற்றாகத் துடைத்தொழிக்கப்பட்டதன் விளைவிலானது. இவ்வாறான வெற்றி அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இலங்கையில் நிரந்தரமான சமாதானத்தை நிறுவுவதற்கான வாய்ப்பை வழங்கியது. இராணுவ வெற்றியைத் தொடர்ந்து, ராஜபக்ஷ அரசாங்கமானது தனது பகிரங்க அறிக்கைகள், கொள்கைகள், மற்றும் நடவடிக்கை மூலம், போருக்குப் பிந்தைய வடக்கு மற்றும் கிழக்கை மறுசீரமைக்கும் அபிவிருத்தி மூலோபாயத்தின் மூலம் சமாதானத்தை நிலைநாட்ட விரும்புவதாகக் காட்டிக் கொண்டது. 2009 மே மாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நேரத்தில், தமிழ் மக்களைக் காப்பாற்றவும் ஒரு பயங்கரவாதக் குழுவைத் தோற்கடிக்கவும் ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகவே அரசாங்கம் போரை வடிவமைத்திருந்தது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இலங்கையில் நிலவுவது ‘அபிவிருத்திப் பிரச்சனையே’. இதை ஜனாதிபதி பல தடவைகள் தனது உரைகளில் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருக்கிறார்.

இதன் விளைவாக, தமிழ் மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறையாக முன்வைக்கப்படும் வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் பேச்சுக்களுடன் ‘அரசியல் தீர்வு’ பற்றிய விவாதம் பொது நிகழ்ச்சி நிரலில் இருந்து மெதுவாக மறைந்து விட்டது. அரசியல் தீர்வுக்கான தேவையிலிருந்து விவாதத்தைத் திசைதிருப்புவதே இந்த உத்தியின் நோக்கம். அபிவிருத்தி முன்னுதாரணத்தின் மூலம் சமாதானத்தைப் பலப்படுத்துவதன் மூலம், மோதலின் மூல காரணங்களை மறுப்பதற்கும், அபிவிருத்தியின் பற்றாக்குறையை மோதலுக்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடுவதற்கும், அதன் மூலம் மோதலை அரசியலற்றதாக்குவதற்கும் அரசாங்கம் முயன்றது. இந்தக் கதையாடலை வடிவமைப்பதில் அரசாங்கம் வெற்றியும் பெற்றது என்றே கொள்ள வேண்டும்.

2009 மே மாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி குறித்த கதையாடல்கள் மூலம் சமாதானம் எட்டுவது என்பது இன்னும் தீவிரமாகப் பலப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியின் சகோதரரான பெசில் ராஜபக்ஷவின் தலைமையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வடமாகாண செயலணியில் ஒரு தமிழர் கூட இருக்கவில்லை என்பது அபிவிருத்தி உந்துதல் எந்த திசையில் செல்லும் என்பதை சுட்டிக்காட்டியது. கிழக்கை விட வடக்கில், இராணுவத் தேவைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதுடன், நீண்டகாலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் காரணமாக, பலத்த இராணுவமயமான சூழலுக்குள்ளேயே அபிவிருத்தி மேற்கொள்ளப்படும் என்பது புலனானது. இது அபிவிருத்தியின் இராணுவமயமாக்கலைக் குறித்து நின்றது.

அபிவிருத்தி என்பது உலகமயமாக்கப்பட்ட உலகின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பிற்குள் மக்கள்தொகையின் நடத்தை மீதான கட்டுப்பாட்டைப் பேணும் ஒரு வடிவமாக மாறியுள்ளது. போருக்குப் பின்னரான அபிவிருத்தியில் இராணுவத்தினரின் ஈடுபாடு அதிகரித்துள்ளதை இராணுவத் தளபதியே விதந்துரைத்துள்ளார். ஆவர் ‘வடக்கில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த பாதுகாப்புப் படைகள் வட பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதில் புதிய பாத்திரத்தில் ஈடுபடுவார்கள்’ என்றார்.

அரசாங்கம் கையாண்ட அபிவிருத்தி மூலோபாயமானது போருக்கான அடிப்படைக் காரணிகளையோ, இனப்பிரச்சனைக்கான தீர்வையோ கவனத்தில் கொள்ளவில்லை. அபிவிருத்தியிலிருந்து உரிமைகள் பிரிக்கப்பட்ட நிலையே போருக்குப் பிந்தைய நாட்டின் வடக்குக் கிழக்கில் இருந்தது. ஆனாலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் நன்கொடையாளர்களும் ஏனையோரும் தொடர்ச்சியாக இலங்கை அரசோடு அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் இணைந்திருந்தன. அவர்களைப் பொறுத்தவரையில் நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சமச்சீரற்ற வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின்மை மோதல்களை விளைவிக்கிறது உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான்,அமெரிக்கா போன்ற இருதரப்பு நன்கொடையாளர்களும் வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதோடு முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்க உதவுகின்றன. உதாரணமாக: கிழக்கு மாகாணத்தில் சம்பூரில் உயர் பாதுகாப்பு வலயத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கு இந்தியா நிதியுதவி செய்கிறது. இதே நிலைப்பாட்டையே ஏனைய நாடுகளும் கைக்கொண்டன.

மே 2009 இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை வர்த்தக உச்சி மாநாட்டில் அமெரிக்க அபிவிருத்தி நிறுவனத்தின் ((USAID) பணிப்பாளர் தனது உரையில், ‘இன்றுவரை,இலங்கை அரசாங்கம் வறுமையைக் குறைத்தல்,பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் அதிகாரத்தை படிப்படியாகப் பரவலாக்குதல் ஆகியவற்றில் முன்னேற்றம் கண்டுள்ளது’ எனக் குறிப்பிட்டார். மேலும் ‘கிழக்கில் உள்ள மூலோபாயம் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பை கட்டியெழுப்புவதற்கு பொருளாதார வளர்ச்சி பங்களிக்கும் என்ற அடிப்படையை அடிப்படையாகக் கொண்டது. இது நிலையான அரசியல் தீர்வுக்கு சாதகமான நிலைமைகளை உருவாக்க உதவும்’ என்றும் சொன்னார். இக்கூற்று அபிவிருத்தியின் ஊடாக அரசியல்தீர்வு என்ற நிலைப்பாட்டிலேயே நன்கொடையாளர்கள் இருந்ததை உறுதி செய்தது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பாரம்பரிய நன்கொடையாளர்களுக்குப் புறம்பாக, ஈரான் போன்ற புதிய நன்கொடையாளர்களின் நுழைவு மற்றும் சீனா போன்ற புதிய அதிகாரமையத்தைக் கட்டமைக்கும் நன்கொடையாளர்களின் அதிகரித்த ஆதரவு, சிறுபான்மை சமூகங்களின் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் வடக்கு மற்றும் கிழக்கில் அதன் அபிவிருத்தி முயற்சிகளை மேலும் முன்னெடுக்க அரசாங்கத்திற்கு உதவியுள்ளது. உதாரணமாக, ஜப்பான், சீர்திருத்தத்தை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு கருவியாக உதவியைப் பார்க்கவில்லை, ஏனெனில் மாற்றம் உள்ளிருந்து மட்டுமே நிகழ முடியும். வெளிப்புற அரங்காடிகள் மூலம் அல்ல என்பது ஜப்பானின் நிலைப்பாடு. எனவே, அரசாங்கம் திறமையாக, தற்போதைய உலகளாவிய உதவிக் கட்டமைப்பை தன் நோக்கங்களை அடைவதற்காகப் பயன்படுத்தியது.

ஒரு புறம் மனிதாபிமான உதவி நிறுவனங்களுக்கு எதிர்ப்பு, மறுபுறம் ஆதிக்கப் போட்டியில் இருக்கும் எதிரெதிர்தரப்புகளை அணுகுவதன் மூலம் நிதிமூலங்களைத் தக்கவைப்பது, உரிமை சார்ந்த விடயங்களை பேசாமல் இருக்கும் நாடுகளுடனான ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் போருக்குப் பிந்தைய காலப்பகுதியை அரசாங்கம் திறமையாக வழிநடத்தியுள்ளது. இலங்கை மேற்கத்திய நாடுகளில் இருந்து விலகி ஜனநாயகத்திற்கு எதிரான மற்றும் மேற்கத்திய விரோத நாடுகளுக்கு ஆதரவாக செயற்படுவது அபிவிருத்திக்கான உதவிகளை வறண்டு போகச் செய்யவில்லை என்பதை போருக்குப் பிந்தைய இலங்கையின் கதை எடுத்துக்காட்டுகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, அதிக பொறுப்புக்கூறல் போன்றவற்றைப் பகிரங்கமாக பல நாடுகள் கோருகின்ற அதேவேளை, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும்,சிறுபான்மையினருக்கு அதிகரித்த பொருளாதார மற்றும் சமூக நலன்களை வழங்குவதற்குமான அபிவிருத்தி முன்முயற்சிகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்து உதவிகளை வழங்கின.

இலங்கைக்குப் பரிசளித்ததில் மேற்கத்தேய நாடுகளின் சர்வதேச அமைப்புகளின் பங்களிப்பு பெரிது. ஆனால் அது இன்றுவரை முக்கிய பேசுபொருளல்ல.

## கடிதங்கள்

# மடிச்சுக்கட்டி நோய்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் தற்பொழுது நெல் பயிர்களுக்கு மடிச்சுக் கட்டி நோய் பரவி வருகிறது. இதனால் நெல் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த விவசாய குடும்பங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

அண்மையில் நாட்டில் பெய்த கன மழையின் பின்னர் இந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது. கடும் மழை காரணமாக பல இடங்களில் நெல் வயல்கள் அழிந்து நாசமாகி உள்ளது. தற்போது மழையிலிருந்து தப்பித்த ஒரு சில வயல்களில் நெற்பயிர்களுக்கு மடிச்சுக் கட்டி நோய் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மடிச்சுக் கட்டி நோயினால், விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். அத்துடன் மருந்து விசிறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், தங்களுக்கு ஏற்ற ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய தரப்பினரிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.

எஸ். தில்லைநாதன்



நாளையும் (7) நாளை மறுதினமும் (8)

# Play Expo & Colombo Comic Expo



Play Expo & Colombo Comic Expo 2024 இம்முறையும் Coca-Cola அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக Gamer.LK அறிவித்துள்ளது. நாளை(7) மற்றும் நாளை மறுதினம் (8), இலங்கை கண்காட்சி மற்றும் மாநாடுகள் நிலையத்தில் (SLECC) இந்நிகழ்வு முன்னெடுக்கப்படும். புத்தாக்கம் மற்றும் ஆக்கத்திறன் ஆகியவற்றுக்கான நாட்டின் முக்கிய களமாக அமைந்திருக்கும் Play Expo இனால், கேமர்கள், பொப் கலாசார ரசிகர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்களை ஒன்றிணைப்பதுடன், திறமைகளினதும் கலாசாரத்தினதும் கொண்டாட்டமாக அமைந்திருக்கும்.

Play Expo 2024 இல் விறுவிறுப்பான Esports போட்டித்தொடரும் உள்ளடங்கியிருக்கும். 20 க்கும் அதிகமான புகழ்பெற்ற தலைப்புகளில் இந்தப் போட்டிகளில் நடைபெறவுள்ளதுடன், இதில் 3000க்கும் அதிகமான கேமர்கள் பங்கேற்பர். போட்டிகரமான கேமிங் மற்றும் சிமியுலேற்றர் ரேசிங் அனுபவங்களை பெற்றுக் கொடுக்கும். 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சைபர் கேம்ஸ் (SLCG) இன் வெற்றியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட Play Expo, தொடர்ந்தும் போட்டிகரத்தன்மையை ஊக்குவிப்பதுடன், இலங்கையின் கேமிங் சமூகத்தில் சிறந்த திறமைசாலிகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. தீவிர கேமர்கள் முதல் சாதாரண ரசிகர்கள் வரை அனைவருக்கும் பொருத்தமான அம்சங்களை இந்த நிகழ்வு கொண்டிருக்கும். கேமிங் தொழினுட்பத்தில் பிந்திய அம்சங்கள் மற்றும் கேமிங் சாதனங்கள் போன்றனவும் காட்சிப்படுத்தப்படும்.

Colombo Comic Expo என்பது Play Expo இன் மிகவும் எதிர்பார்ப்புகள் நிறைந்த அம்சமாகும். இதில் விறுவிறுப்பான Cosplay Ramp Walk அடங்கியிருக்கும். 200 க்கும் அதிகமான cosplayerகள் பங்கேற்று, தமக்கு விரும்பிய கதாபாத்திரங்களை நிஜவாழ்க்கையில் கொண்டுவருவர். நாட்டில் முன்னெடுக்கப்படும் மாபெரும் cosplay கொண்டாட்டமாக அமைந்திருப்பதுடன், Play Expo இனால் ஆக்கத்திறன், வடிவமைப்பு மற்றும் சுய வெளிப்படுத்தல் போன்றவற்றுக்கு களம் வழங்கி, பொப் கலாசார ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் நிகழ்வாகவும் அமைந்திருக்கும்.

இலங்கையின் சுயாதீன கலைஞர்கள் மற்றும் அவர்களின் ஆக்கங்களை பார்வையாளர்கள் கண்டுகளிக்கலாம். டிஜிட்டல் கலை, கமிக்ஸ் மற்றும் ரசிகர்களை கவரும் மேர்ச்சன்டைஸ் தெரிவுகள் போன்றன இதில் அடங்கியிருக்கும். உள்நாட்டு திறமைசாலிகளின் ஆக்கங்களை வெளிப்படுத்தும் இந்நிகழ்வில் விருந்தினர்களுக்கு இந்த தயாரிப்பாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, இந்த கலையம்சங்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

ரசிகர்களுக்கு தமக்கு விருப்பமான influencers, vloggers மற்றும் streamers களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். புகழ்பெற்ற நபர்கள் உள்ளக தகவல்களை பகிர்வதுடன், விருந்தினர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டு, இலங்கையின் விறுவிறுப்பான ஒன்லைன் சமூகத்தின் கொண்டாட்டத்துக்கு வலுச்சேர்ப்பார்கள்.

Gamer.LK இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ரவீன் விஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டின் Play Expo என்பது,இலங்கையின் இளைஞர் கலாசாரம், ஆக்கத்திறன் மற்றும் டிஜிட்டல் களிப்பூட்டும் அம்சங்கள் போன்றவற்றின் பெருமளவு வளர்ச்சிக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ஈடுபாடு, புத்தாக்கம் மற்றும் சுய-வெளிப்பாடு ஆகியவற்றை பிரத்தியேகமான முறையில் கட்டியெழுப்பி, பரந்தளவு சமூகங்களை ஒன்றிணைக்கும் ஒரு களமாக இந்நிகழ்வு வளர்ச்சியடைந்துள்ளதை காண்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்." என்றார்.

கேமிங் மற்றும் தொழினுட்பத்தில் பிந்திய அறிமுகங்களை விருந்தினர்கள் அனுபவிக்க முடியும். கண்காட்சியில் சக்தி வாய்ந்த gaming rigs, VR அனுபவங்கள் மற்றும் புத்தாக்கமான சாதனங்கள் போன்றன தொழினுட்பத்தையும் சிந்தனையையும் ஒன்றிணைத்து வெளிப்படுத்தும். முன்னணி தொழினுட்ப மற்றும் வாழ்க்கை முறை வர்த்தக நாமங்கள் பிரத்தியேகமான சலுகைகள் மற்றும் நேரடி செயற்படுத்தல் விளக்கங்கள் போன்றன நிகழ்வில் காண்பிக்கப்படும்.

# HCLTech உடன் MMBL-Pathfinder இணைவு

இளைஞர்களுக்கு புத்தாக்கமான தகவல் தொழினுட்ப பயிற்சிகளை வழங்கும் முகமாக MMBL-Pathfinder குழுமம், HCL TechGroup உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது. டிஜிட்டல் யுகத்துக்கு திறன்மிக்க தொழிலாளர் படையொன்றை உருவாக்குவதை முக்கிய நோக்காக கொண்டு அண்மையில் Pathfinder EdTechInstitute தோற்றுவிக்கப்பட்டது. பங்குடைமையின் முக்கிய அம்சமாக தொழில்துறை தேவைகளுக்கேற்ற கல்வியியல் தகைமைகளை தடையின்றி பெறும் வகையில் HCLTech Career Shaper எனும் தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

HCLTech இன் விதந்துரைக்கப்பட்ட பயிற்சி முறைகள், நிபுணத்துவத்துடன் வடிவமைக்கப்பட்ட பாடவிதானங்கள் மற்றும் அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் என்பனவற்றுடன் இந்த முன்னோடிதிட்டமானது ஒவ்வொரு தனிநபரையும் வேலைக்கு ஆயத்தமான சாத்தியமான திறன்களைக்கொண்டவராக மாற்ற உதவுகிறது.

இந்த முன்னோடி நிகழ்ச்சி திட்டத்துக்கு அமைய யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய பகுதிகளில் இரண்டு பயிற்சிநிலையங்கள் அமைக்கப்படும். இதுநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பின்னர் விஸ்தரிக்கப்படும். முதலாவது பாடநெறியானது செயற்கை நுண்ணறிவு மற்றும் இணைய பாதுகாப்பு என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இன்னும் பல விடயதானங்களையும் உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கற்றல் அணுகுமுறையானது தொழினுட்ப பாடவேளைகள், பங்கேற்பாளர்களின் நேரடி பங்கேற்பிலான செயற்பாடுகள், உலக பயிற்சிவாய்ப்புகள் என்பனவற்றோடு மாணவர்களுக்கு விரிவான மற்றும் ஆழமான கல்வி அனுபவங்களை வழங்குகிறது.

'MMBL-Pathfinder குழுமத்துடனான எங்களது புரிந்துணர்வு ஒப்பந்தமானது நிலைமாற்ற கல்வியின் மூலம் சமூகங்களை அதிகாரம் உள்ளவர்கள் ஆக்கும் HCLTech இன் அர்ப்பணிப்பினை மீளவலியுறுத்துகிறது Career Shaper□ஐ இலங்கைக்கு கொண்டு வந்ததன் மூலம் சர்வதேச தகவல் தொழினுட்ப சந்தைக்கு ஏற்றவகையில் இலங்கை தகவல் தொழினுட்ப தொழில் வாண்மையாளர்களை வடிவமைக்கிறது' என்றார் HCLTech, EdTech இன் சர்வதேச தலைவர் ஸ்ரீமதிசிவசங்கர் கூறினார்.

இந்த முன்னோடி திட்டமானது உயர்தரமான தொழினுட்ப அறிவை உலகெங்கும் கிடைக்கசெய்யவேண்டும் என்ற HCLTech இன்எண்ணக்கருவுக்கு அமைவாக உள்ளது. சாத்தியமான தொழில் வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காக புதிய தொழினுட்பங்களை பயன்படுத்தும் நிலைமாறு வேலைபடையொன்றை உருவாக்கும் முகமாக 59க்கும் மேற்பட்ட நாடுகளில் முன்னோடி தொழினுட்ப நிறுவனமாக உள்ளது.

'Pathfinder EdTech நிர்வாகத்தின் இந்த அறிமுகமானது பிராந்தியத்தில் தகவல்தொழினுட்ப புத்தாக்கத்துக்கான கேந்திரநிலையமாக மாறும் இலங்கையின் கனவை மேலும் பலப்படுத்துகிறது. இந்த பங்குடைமையானது திறன்மிக்க தொழில்வாண்மையாளர்களை உருவாக்கக்கூடியதாக இருக்கும். டிஜிட்டல் திறன்களில் பிராந்தியத்தின் தலைமைவகிக்கும் ஒரு நாடாக தன்னை மாற்றிக்கொள்ளும் இலங்கையின் கனவுக்கு இது பங்களிக்கின்றது. இலங்கையின் திறன்களில் முதலீடு செய்வதன் மூலம் நாங்கள் கல்வியை மாத்திரம் முன்னேற்றவில்லை மாறாக பொருளாதார வளர்ச்சிக்கும் புத்தாக்கத்துக்குமான வாய்ப்புகளை அதிகரிக்கின்றோம் என MMBL-Pathfinder குழுமத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான பாலசுந்தரம் கூறினார்.

HCLTech பிரசன்னம் ஆனது சாதகமான முறையில் விரிவடைந்து இருக்கிறது. இந்நிறுவனமானது அதன்பாரிய சேவை நிறுவனத்தை கொழும்பில் உள்ள TheCinnamonLife வளாகத்தில் நிறுவியுள்ளது. அத்துடன் இலங்கையை பிராந்தியத்தின் தகவல்தொழினுட்ப கேந்திர நிலையமாக மாற்றும் வகையில்டி ஜிட்டல் பிரயோகங்கள், முறைமை உள்ளடக்கம், உற்பத்திமேம்பாடு, மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு என்பன வற்றில் கவனம் செலுத்துகிறது.

# எயிட்ஸ்



பலரும் பார்த்து
ரசித்த புத்தகம்
பார்த்தவரெல்லாம்
அள்ளி அனைத்திட
நினைத்த புத்தகம்

வரிகள் அனைத்தும்
அழகிய வளைவுசுழிவுகள்
பிரம்மன் பார்த்துபார்த்து
படைத்திட்டான் போலும்
இப்புத்தகத்தை

பலரும் படிக்க
நினைத்தபோது
அதன் விலையோ
அதிகம்
கோடிகளில் புரழ்வோரும்
தேடிவந்து
விலைக்குவாங்க
ஆசைப்பட்டபோதும்
புத்தகம் விலைக்கு அல்ல
வாடகைக்கு என
பலர் கைகளுக்கு
கைமாற்றப்பட்டது

தம்மை நாள்
பதித்துக் கொண்ட
கோடிகளோ
வரிகளை
ஒன்றுவிடாமல்
மனம் தொட்டது
போதாமல்
விரல்களும் தொட்டு
சுவைத்தனர்

முந்தய நாள்
இரவுமுதல்
விடியப்போகும்
காலை வரை
புத்தகத்தில் மூழ்கியோர்
பலர்

வருடங்கள் பல நீள
பக்கங்களோ
கசங்கிப்போனது
வரிகள் எல்லாம்
சிதைந்து
அட்டை பக்கமும்
கிழிந்துபோனது

இளமை முதுமை என
பருவங்கள் வகுக்கப்பட்ட
இப்புத்தகம்
வழி தவறி வாழ்ந்ததால்
கறையான் அறித்ததுபோல்
ஆங்காங்கே சிதைவுகளுடன்
வந்து ஒட்டிக்கொண்டது
எயிட்ஸ்

பா.அஸா.பஸ்லி
கொழும்பு - 13

# என் இடம் இனி எங்கே...



பக்குவமாய் சொல்லி வைக்கின்றேன்...
என்னை இதுவரை வளர்த்தெடுத்த
என் வீடு இடிந்துவிழமுன்பு-
பெற்றோர் முன் பட்டம்
பெற்றுநிலைமாற்றி
கல் வீட்டில் காலம் வாழ என் கனவு...

கையில் சட்டம் வாங்கி
களைஎடுக்கும் காலம் நனவாகும்
அதன் வேர்கள்எம்மில்
ஆழ பதிந்துரணமாக்கும்...

அடைமழையில் கூரை
காற்றில் பறந்துஉயிரைபதம் பார்க்கும்...
ஊசாலாடும் மின் கம்பம்
எம்மை தீக்கிரையாக்கும்.

எங்களின் கணத்த குரல்களும்
ஓர் நேர பரபரப்பு செய்தியாய்மறையும்.
எங்கள் ஆதகங்கள் அரசியல்
மேடை ஏறும் சுயவிளம்பரம் குவியும்.
கும்பிடு போட்டுதலை கூனிய
அணிவகுத்த ஊராரும் அடிப்பட்டு
அலைமோதும்.
என் உறவுகளின் உடல் உக்கிய
இடத்தில்
உலகை மிஞ்சியசுவை
தரமாக பணம் பார்க்கும் ...
என் இடதகுதி
தலைகீழாக விழப்பார்க்கும் ...

நீயா தூக்கிபிடித்து காப்பாற்ற
வந்தாய் உன் வேலையைபாரு ! என்றால்
என் உயரிய கனவோடு
நான் படிப்பில் களம் காண
குறிப்பார்க்கும் நேரம் ...
கொட்டித் தீர்த்த அடை மழையில்
என் வீடு இடிந்து விழுந்தது.
என் இடம் இனி எங்கே !..

வியாத்தன்



### 3ஆம் உலக யுத்தத்தை
# நோக்கி நகரும் சர்வதேசம்



ஜிந்துஜா விஜயகுமார்
இரண்டாம் வருடம்,
ஊடககற்கைத் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல மாறிவிட்டது உக்ரைனுக்கான அமெரிக்காவின் ஆயுத அனுமதி.

ஏற்கனவே போர் சூழலில் நிரம்பியுள்ள மேற்குலகில் அமெரிக்கா உக்ரைனுக்கு தனது அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கியதை தொடர்ந்து, எப்போது வேண்டுமானாலும் 3 ஆம் உலக யுத்தம் ஏற்பட்டு விடும் என்கிற நிலைமை தோன்றி விட்டது.

அடிவயிற்றில் நெருப்பைக் காட்டியது போல உலக நாடுகள் எப்படியாவது இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று போராடி வருகின்றன. ஏனெனில் உலக யுத்தம் என்ற ஒன்று ஏற்பட்டால் நிச்சயம் அது உலகளவில் பாரியளவிலான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் ஆகும்.

ஆயிரம் நாட்களை கடந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் உக்கிரன் ரஷ்யா போர் அறிவிக்கப்படாத ஒரு மூன்றாம் உலகப்போராகவே பார்க்கப்படுகின்றது. இந்த யுத்தத்தின் விளைவுகள் எண்ணிப் பார்க்க முடியாது.

ரஷ்யா- உக்ரைன் போரில், இதுவரையில் 1,20,000 ராணுவ வீரர்களை இழந்திருக்கிறது ரஷ்யா. அதேபோல், உக்ரைன் சுமார் 80,000 படை வீரர்களை பறிகொடுத்திருக்கிறது.

ஐ.நா அறிக்கையின்படி, ரஷ்யா-உக்ரைன் போரின் 600-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட சுமார் 14,000-க்கும் அதிகமானோர் கோரப்பிடியில் சிக்கி உயிரிழந்திருக்கின்றனர்.

மேலும், 1,496 கல்வி நிறுவனங்கள், 662 சுகாதார நிலையங்கள், மின்சார நிலையங்களும் சேதம் அடைந்திருக்கின்றன. இலட்சக்கணக்கான மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் டொனால்ட் ட்ரம்ப், ``நான் போர்களை தொடங்கப் போவதில்லை, நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்களை நிறுத்தப்போகிறேன்” என்று கூறியது போர் நிறுத்தத்துக்கான நம்பிக்கை அறிகுறியாகத் தென்பட்டது.

ஆனால், அதன் பின்னும் தீவிரமாக போர் நடவடிக்கைகள் நடைபெற்று வருவது உலக மக்களை கவலை கொள்ளச் செய்திருக்கிறது.

உக்ரைன் - ரஷ்யா போருக்கான அடிப்படை காரணம் நேட்டோவில் உக்ரைன் இணையக் கூடாது என்ற ரஷ்யாவின் எண்ணமாகும்.

நேட்டோ என்பது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு. அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட 12 நாடுகள் சேர்ந்து 1949இல் இந்த இராணுவ கூட்டு அமைப்பை உருவாக்கின.

இதில் உறுப்பினராக உள்ள எந்த ஒரு நாடு மீது ஆயுத தாக்குதல் நடந்தால், அந்த நாட்டைக் காக்க மற்ற உறுப்பு நாடுகள் ஓரணியாக சேர இணங்க வேண்டும்.

ஐரோப்பாவில் பனிப்போர் காலத்துக்குப் பிந்தைய ரஷ்ய விரிவாக்க அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நோக்கத்தையே இந்த அமைப்பு குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1955இல் நேட்டோ கூட்டுப்படைக்கு எதிர்வினையாற்றும் வகையில் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகள் கூட்டணியுடன் ரஷ்யா வார்சா ஒப்பந்தத்தை ஏற்படுத்தி தனியாக இராணுவ கூட்டணியை அமைத்தது.

வார்சா ஒப்பந்தத்தின்படி இணைந்த நேச நாடுகளில் பல 1991இல் சோவித் யூனியன் பிளவு பட்ட பிறகு ஒப்பந்தத்தில் இருந்து விலகி நேட்டோவில் உறுப்பினர்களாயின. இப்போது நேட்டோ அமைப்பில் 30 உறுப்பு நாடுகள் உள்ளன.

ரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லைகளில் அமைந்துள்ள முன்னாள் சோவியத் குடியரசின் அங்கமாக இருந்ததுதான் உக்ரைன்.

உக்ரைன் இதுவரை நேட்டோவில் உறுப்பினர் ஆகவில்லை. ஆனாலும், அது நேட்டோ நேச நாடாக விளங்கி வருகிறது. அப்படியென்றால், எதிர்காலத்தில் எப்போதாவது ஒரு கட்டத்தில் நேட்டோ அமைப்பில் உறுப்பினராக சேர உக்ரைன் அனுமதிக்கப்படலாம் என கருதலாம்.

ஆனால், அப்படி ஒன்று நடக்கவே கூடாது என்ற உத்தரவாதத்தை மேற்கு நாடுகள் தர வேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது.

எனினும், நேட்டோவுடன் உக்ரைன் நட்பு பாராட்டுவதற்கு தடை விதிக்க அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மறுத்து வருகின்றன. தமது பாதுகாப்பு கூட்டாளிகளை சுயமாக தேர்வு செய்யும் சுதந்திரம் இறையாண்மை மிக்க நாட்டுக்கு இருக்க வேண்டும் என்று அந்த நாடுகள் கூறி வருகின்றன.

இதன்படி தனது எல்லை நாடான உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே ரஸ்யா உக்ரைன் மீது போரை ஆரம்பித்தது.

இதிலிருந்து ரஸ்யா உக்ரைன் மீது தாக்குதல் நடத்துவதை எதிர்த்து உக்ரைன் தாக்குதல் நடத்துவதற்குரிய ஆயுத உதவிகள் முதல் பணஉதவிகள் வரை அமெரிக்கா, ஜேர்மன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் இராணுவ உதவி வழங்கி வந்தன.

இருப்பினும் அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கிய அணுஆயுதங்களை பயன்படுத்துவதற்கு அனுமதி மறுத்து வந்தது.

இந்நிலையில், தற்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவி காலம் முடிவடைய உள்ளது. இந்நிலையில், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன், அந்த அணுஆயுதங்கள் பயன்படுத்துவதற்கு உரிய அனுமதியை உக்ரைனுக்கு வழங்கியது தான் இப்போது இருக்கின்ற இந்த நிலைமைக்கு மூல காரணம் என்று சொல்லலாம்.

அமெரிக்கா மாத்திரமன்றி ஜேர்மன், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் தங்களுடைய ஆயுத உதவிகளை உக்ரைனுக்கு அதிகரித்துள்ளன.

அதாவது இதுவரை நாட்களும் சிறிய சிறிய தாக்குதலை நடத்தி வந்த உக்ரைன் , அமெரிக்கா வழங்கிய ஆயுத அனுமதியை பயன்படுத்தி ரஸ்யாவிற்குள் அதிரடி தாக்குதலை முன்னெடுத்தது.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாது ரஷ்யா உக்ரைன் மீது பதிலடி தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளது. அமெரிக்கா அணு ஆயுத அனுமதியை வழங்கியது ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின் கோபத்தின் உச்சத்திற்கே சென்று விட்டார். இதனால் தனது அணு ஆயுத கொள்கைகளையே மாற்றியமைத்து விட்டார்.

அதாவது, அணு ஆயுதம் இல்லாத நாடு உக்ரைன், அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் (அமெரிக்கா) கூட்டணி வைத்து ரஷ்யா மீது போர் தாக்குதல் மேற்கொண்டால், அந்த நாடுகள் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்தும் உரிமை ரஷ்யாவுக்கு உள்ளது என்கிறது ரஷ்யாவின் புதிய அணு ஆயுதக் கொள்கை.

குறிப்பாக, பாலிஸ்டிக் ஏவுகணை உள்ளிட்ட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயுதங்களை பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது,

> **இரண்டாம் உலக போரில் ஹிட்லர் என்ன செய்தாரோ அதையே தற்போது பலஸ்தீன மக்களுக்கு நெதன்யாகு செய்து வருகிறார்.**

அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற இரு பெரும் சக்திகள் ஒன்றை ஒன்று எதிர்த்து போரில் களமிறங்கினால் நிச்சயமாக அது உலகளவில் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே அனைவரின் பதற்றமாக காணப்படுகின்றது.

மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் விதமாக மூன்றாம் உலகப் போருக்கான அச்சங்கள் அதிகரித்து வருவதால், பிடென் மிகவும் சர்ச்சைக்குரிய ஆயுதத்தை வாங்க உக்ரைனுக்கு $725 மில்லியன் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஜோ பைடன் இந்த செயல்பாடு தான் பதவியை விட்டு வெளியேறும் முன் உக்ரைனுக்கான தனது உதவியை இரட்டிப்பாக்குவதாகத் தெரிகிறது என சர்வதேச விமர்சனங்கள் வெளியாகிவருகின்றன.

புடின் எவ்வளவு எச்சரித்தும் கேட்காமல், தன்னாலான உதவிகளை செய்து விடுவது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முடிவு செய்து மேற்கொள்ளும் செயல்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது என்றே சொல்லலாம்.

அதேபோல், ரஷ்யாவிற்கு எதிராக போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஜேர்மனி, இரண்டு medium-range SLM மற்றும் short-range SLS ஆகிய IRIS-T வான்வழி பாதுகாப்பு அமைப்புகளை இவ்வாண்டின் இறுதிக்குள் அனுப்ப உள்ளதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில்,

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கபட்ட டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்னதாக, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளுடன் அணுசக்தி முட்டுக்கட்டைக்கு தீர்வு காண, ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான் தலைமையிலான ஈரான் அரசு எதிர்பார்க்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரில் உக்ரைன் தனித்து நின்று வெல்லுமா என்று நம்பிக்கையாக கூறமுடியாது. நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் போர் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். உக்ரைனில் போர் நிறுத்தம் ஏற்படுவது கூட இன்னும் சாத்தியம்தான்.

இந்நிலையில் யுத்தத்தினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வது போல் அமெரிக்கா ஒருபுறமும் ரஷ்யா மறுபுறமும் ஆயுத பலத்தை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் மூன்றாம் உலகப் போர் உருவாகலாம் அணு ஆயுதப் போராக மாறும்.. இது பேரழிவை ஏற்படுத்தும் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அழிந்து போவார்கள் என்று பிரபலமான ஆயர் ஒருவர் தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளார்.

ஏற்கனவே எப்போது உலக போர் வெடிக்கப்போகின்றதோ என்ற அச்சத்தில் இருக்கும் மக்களுக்கு இவரின் இந்த கூற்று மேலும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில் தான் மூன்றாம் உலகப் போர் அணு ஆயுதப் போராக மாறும். இதனால் பல உயிர்கள் பறிபோகும், பிழைப்பவர்கள்.. ஏன் பிழைத்தோம் என்று வருந்துவார்கள்.. மனிதகுலத்திற்கு ஒரு இருண்ட எதிர்காலத்தை இது உருவாக்கும். மிக மோசமான பேரழிவை ஏற்படுத்தும் என்று பிஷப் மார்க் மாரி இம்மானுவேல் கணிப்பை வெளியிட்டு உள்ளார்.

இந்நிலையில் உலக நாடுகள் முக்கியமாக அமெரிக்கா ,ஜெர்மன், பிரித்தானியா, டென்மார்க் போன்ற நாடுகள் தங்களது நாட்டின் குடிமக்களை மூன்றாம் உலக யுத்தம் ஏற்படப் போவதாகவும் அதற்கு சரியான முறையில் தயார் நிலையில் இருக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா போன்று மறுபுறம் இஸ்ரேல் - ஈரான் யுத்தமும் அதிகம் பேசுபொருளாகியுள்ளது.

கடந்த வருடம் அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் ஆயுத குழுவால் இஸ்ரேலுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் இன்று ஈரான் - இஸ்ரேல் யுத்தமாக மாறியுள்ளது.

ஏனெனில், ஹமாஸ் போராளிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறது ஈரான். பயங்கர வாதிகளாக இஸ்ரேல் ஹமாஸ் போராளிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் உண்மையில் இவர்கள் தங்களுடைய மண்ணின் விடுதலைக்காக போராடுகின்ற போராளிகளாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஹமாஸ் முக்கிய தலைவர்களை கொன்றதற்காக பழி வாங்கும் விதமாக ஈரான் இஸ்ரேல் மீது நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியது.

இந்நிலையில், இஸ்ரேல் மீது 3ம் கட்ட தாக்குதல்களை நடத்த தயாராகி உள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் உடன் மத்திய கிழக்கு நாடுகள் செய்த எந்த ஒப்பந்தத்தையும் இதில் மதிக்க மாட்டோம் என்று ஈரான் தெரிவித்துள்ளது

பெர்லின், லண்டன் மற்றும் வாஷிங்டனில் உங்களின் அலறல் கேட்கும் என்று இஸ்ரேலுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரான் விரைவில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதாக கூறப்படும் நிலையில்.. இதற்காக இஸ்ரேல் தயார் நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

ஈரானின் இந்த பகிரங்க மிரட்டல் மேலும் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஹமாஸ் போராளி குழுக்களுக்கு எதிராக இஸ்ரேல் ஆரம்பித்த யுத்தத்தில் 43 ஆயிரத்திற்கும் அதிகமான அப்பாவி பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் காயமடைந்தனர்.

அங்குள்ள மக்கள் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் தினம் தினம் போராடி வருகின்றனர்.

ஒரு உயிருக்கு இஸ்ரேல் கொடுக்கும் மதிப்பு என்பது இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. இரண்டாம் உலக போரில் ஹிட்லர் என்ன செய்தாரோ அதையே தற்போது பலஸ்தீன மக்களுக்கு நெதன்யாகு செய்து வருகிறார்.

தினம் தினம் இஸ்ரேல் நடத்துகின்ற தாக்குதலினால் காசா மக்களின் வாழ்க்கையே சீர்குலைந்துள்ளது.

> **உலக யுத்தம் ஏற்படுமாயின் அதன் விளைவுகள் நிச்சயம் யாரும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.**

இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிராக திரும்பியுள்ளது சர்வதேச நாடுகள்.

காசா மக்களுக்கு எதிரான போர் குற்றங்கள் தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் மற்றும் ஹமாஸ் தலைவர் இப்ராஹிம் அல்-மஸ்ரி ஆகியோர் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைதாணை பிறப்பித்தது.

ஆனால் இந்த கைது பயனற்ற ஒன்றாக உள்ளது.

இந்த நிலையில், பிரித்தானியாவும் கனடாவும் நெதன்யாகு கைது குறித்து உறுதி அளித்துள்ளது. ஜெர்மனி பின்னர் முடிவை அறிவிக்க உள்ளது.

இஸ்ரேல் நாட்டின் பிரதமர் நெதன்யாகுவிற்கு எதிராக அனைத்து நாடுகளும் ஒன்று திரண்டால் நிச்சயம் அது மிகப்பெரிய அதிர்ச்சியாக இஸ்ரேலுக்கு அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த 13 மாதங்களாக காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்துவரும் போரில் கொல்லப்பட்ட பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வருகின்ற இன்னல்களுக்கும் கொடூரங்களுக்கு ஒரு முடிவில்லாமல் இஸ்ரேல் செயற்பட்டு வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆக தற்போது மேற்குலகில் இரு மாபெரும் யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அதிலும் முக்கியமாக உக்ரைன் - ரஸ்யாவிற்கிடையிலான யுத்தம் மூன்றாம் உலக போரை ஏற்படுத்த அதிகம் வாய்ப்பிருப்பதால் சர்வதேச நாடுகள் அந்நிலையை தடுப்பதற்கு தங்களால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

அவ்வாறு இல்லாமல் மூன்றாம் உலக யுத்தம் ஏற்படுமாயின் அதன் விளைவுகள் நிச்சயம் யாரும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.



# சுற்றுச்சூழலுக்கு ஆபத்து



பு.நந்தினி
இரண்டாம் வருட மாணவி,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

உலகின் இயற்கை சூழல் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் இனி மறைக்க முடியாத நிலையில் உள்ளன. காலநிலை மாற்றம், வனவெட்டம், மாசு, உயிரினங்கள் அழிவு, மற்றும் இயற்கை வளங்களின் அழுத்தமான ஏற்றுமதி ஆகியவை பூமிக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. மனிதனின் செயல்பாடுகள் தற்போது சுற்றுச்சூழலின் பல்வேறு கூறுகளை சேதப்படுத்துவது, உலகின் அனைத்து உயிர்களுக்கும் நன்மை தரும் இயற்கையின் அமைதியையும் சீரழிக்கின்றன. இப்பெரும் பிரச்சனைகளை விரிவாக ஆராய்ந்து, அவற்றின் காரணங்கள் மற்றும் அதற்கான தீர்வுகளை நோக்கி மனித சமூகம் முன்னேற வேண்டிய அவசியத்தை இந்தக் கட்டுரை விவரிக்கிறது.

## 1. காலநிலை மாற்றம்

நமது தலைமுறையின் மிகப்பெரிய சவால் காலநிலை மாற்றம், பெரும்பாலும் மனிதர்களின் செயல்பாடுகளால் ஏற்படுகிறது. எரிபொருள் எரிப்பு, வனங்கள் வெட்டல், தொழில்துறை வளர்ச்சி ஆகியவை பெருமளவு கார்பன்டை ஆக்சைடு (CO2) மற்றும் மீத்தேன் போன்ற வெப்பமண்டல வாயுக்களை வெளிப்படுத்துகின்றன. இவை வெப்பத்தைச்சிக்கவைத்து, பூமியின் சராசரி வெப்பநிலையை உயர்த்துகின்றன. இந்த மாற்றம் எவ்வளவுதான் சிறியதாக தோன்றினாலும், அதன் விளைவுகள் மிகப்பெரிய மாற்றங்களை வெளிப்படுகின்றன.

வெப்பநிலையின் அதிகரிப்பு விளைவாக, பெரும் சூறாவளிகள், கடுமையான வெப்ப அலைகள், வறட்சி, மற்றும் காட்டுத்தீகள் அதிகரித்துள்ளன. பனிப்பாறைகள் மற்றும் துருவப் பகுதிகளில் உள்ள பனி உருகுவதால் கடல் மட்டம் உயர்ந்து கடற்கரைப் பகுதிகளில் பெரும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. இது உடன், பரந்த அளவிலான வெப்பமண்டல மாற்றங்களை ஏற்படுத்துகிறது, குறிப்பாக பவளப்பாறைகள் மற்றும் கடல் வாழ்வினங்கள் அழிவை சந்திக்கிறது. இது மட்டுமின்றி, வேளாண்மை மற்றும் குடிநீர் வளங்கள் கையாளும் முறைகளிலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

## 2. வனவெட்டம்

உலகின் மூச்சுக் காற்று மண்டலம் அழிவின் விளிம்பில் காடுகள் உலகின் மூச்சுக்காற்றுமண்டலமாக உள்ளன, அவை மனிதர்களுக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான ஆக்சிஜனை அளிக்கின்றன. ஆனாலும், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மற்றும் அடிப்படை தேவைகளுக்காக வனங்கள் வெட்டப்பட்டு, காடுகளின் பரப்பளவு தினமும் குறைந்து வருகிறது. வனவெட்டம் காரணமாக மண்ணின் அடிப்படைக்கூறுகள் பாதிக்கப்படுவதோடு, மண் கரையும் ஆபத்தில் உள்ளது. இதன் விளைவாக நிலச்சரிவு, வெள்ளம் போன்ற பேரிடர்கள் ஏற்படும் சாத்தியங்களும் அதிகரிக்கின்றன.

## 3. மாசு

புவியின் வளங்கள் நாசமாக்கும் கடாய் மாசு என்பது சுற்றுச்சூழலுக்கான மிகப்பெரிய ஆபத்துகளில் ஒன்று. காற்று மாசு, நீர் மாசு, மற்றும் மண் மாசு ஆகியவை அனைத்தும் மனிதனின் செயற்பாடுகளால் அதிகரிக்கின்றன. பெரும்பாலான நகரங்களில் காற்று மாசு உடனடியாக மனிதர்களின் நலனைக் குறைக்கிறது. தொழில்துறைகழிவுகள், வேளாண் விளைபொருள் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் நிலத்திற்கும் நீர்த்தொட்டிகளுக்கும் கடுமையாக மாசுபாடு ஏற்படுத்துகின்றன.

காற்று மாசு காரணமாக மூச்சுக் கோளாறுகள், இருதய நோய்கள் மற்றும் சில வகையான புற்றுநோய்கள் போன்ற பல உடல்நலப் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. நீர்நிலைகளில் காணப்படும் கெட்ட கழிவுகள் குடிநீரின் தரத்தை பாதிக்கும் சாத்தியங்களை உருவாக்குகின்றன. மேலும், பிளாஸ்டிக் கழிவுகள் கடல் வாழ்வினங்களுக்கும் கடுமையான ஆபத்தை ஏற்படுத்துகிறது, இதனால் கடல் வாழ்வினங்களில் பல விதமான இனங்கள் அழிந்து வருகின்றன.

## 4. உயிரின அழிவு

புவியின் பல்லுயிர் நிலை குன்றுகிறது. உலகம் முழுவதும் பல்வேறு உயிரின வகைகள் ஒழிந்து வருகின்றன. இது முக்கியமாக மனிதர்களின்செயற்பாடுகளால் ஏற்படுகிறது. வனவெட்டம், காலநிலை மாற்றம், மற்றும் அதிகரிக்கும் மாசு ஆகியவை உயிரினங்களின் வாழ்விடம் அழிவுக்கு காரணமாகின்றன. பல்லுயிர் நிலையின் குறைபாடு சுற்றுச்சூழல் செழுமையையும், உயிரியல் பரம்பரை அமைப்புகளையும் கடுமையாக பாதிக்கிறது.

பல்லுயிர் நிலை குறைவதன் காரணமாக சுற்றுச்சூழல் செழுமையான சமநிலை பாதிக்கப்படுகிறது. மருந்துகள், உணவுகள் மற்றும் பல்வேறு இயற்கை வளங்கள் மீது நம்பிக்கையாய் உள்ள மனித சமூகம், இதனால் அதன் அசைவையும் குறைத்து ஒடுக்கப்படும் நிலையில் உள்ளது. குறிப்பாக, குறிப்பிட்ட பகுதியின் உயிரினங்கள் அழியும் போது, அந்த சூழலின் இயற்கையான சுழற்சி பாதிக்கப்படும்.

5. இயற்கை வளங்களின் துயரம்: எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் சுரண்டல்

அச்சமூட்டும் வகையில் இயற்கை வளங்கள் வேகமாக துயரமாகின்றன. அதிகரிக்கும் ஆற்றல் தேவைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி காரணமாக, எண்ணெய், நிலக்கரி, மற்றும் இயற்கை எரிவாயு ஆகிய வளங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் விளைவாக நிலத்தன்மை குறைகிறது, காடுகள் அழிக்கப்படுகின்றன, மற்றும் நிலத்தின் அளவில்லாத துயரம் குன்றுகிறது.

இதற்கான தீர்வுகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை பயன்படுத்துதல், மேலாண்மை முறைகளைச் சரிசெய்தல், மற்றும் ஒரு தார்மீகமான சுரண்டலற்ற வளர்ச்சியை நோக்கி முன்னேறுவது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

நம்மால் முடிந்த மாற்றங்களை மேற்கொள்வோம்

சுற்றுச்சூழல் ஆபத்தில் உள்ளது என்பதை மறுக்க முடியாத உண்மை. நம் செயல்களால் ஏற்பட்ட இந்த ஆபத்தை மாற்றுவது நமது பொறுப்பு. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் பங்களிக்க முடியும். குறைந்த கரிம எரிபொருள் பயன்பாடு, எளிய முறையில் மறுசுழற்சி முறையை பின்பற்றுதல், மற்றும் இயற்கையை பாதுகாக்க விழிப்புணர்வை உருவாக்குதல் ஆகியவை அடிப்படையான நடவடிக்கைகள் ஆகின்றன.

நாம் எடுக்கும் சிறிய மாற்றங்கள் கூட மிகப் பெரிய பயன்களை ஏற்படுத்தக்கூடியவை. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அவசியத்தை உணர்ந்து, அதற்காக ஒவ்வொருவரும் நம்மால் முடிந்ததையே செய்தால், எதிர்கால தலைமுறைக்கு ஒரு பசுமையான, சுத்தமான உலகத்தைத் தர முடியும்.





# எதுநடக்குமோ... அது...



ஷெல்லிதாசன்

மாலினி...பிள்ளை மாலினி...

அடுத்த வீட்டு கமலா மாமியின் குரல் வாசலில் ஒலித்தது.

எட்டிப் பார்த்தேன்;.

மாமி எங்கள் வீட்டுக் கேற்றுக்கு முன்னால் நின்று அழைப்பதைக் கண்ணுற்றேன்.

கேற்றடிக்கு போன நான்,கேற்றை திறந்தபடி 'என்னமாமி இந்த நேரம்...இரவு பத்து மணியாகுது. ஆருக்கும் சுகமில்லையோ?'

'இல்லையடி பிள்ளை...எனக்கொரு உதவி செய்வியே பிள்ளை'

'சொல்லுங்கோ....உங்களுக்கு இல்லாத உதவியே'

'பிள்ளை மாலினி... நானும்,மகள் சித்திராவும்,பிள்ளையளும் நாளைக்கு விடியக் காலை ஐந்துமணி பஸ்சுக்கு கொழும்புக்குப் போறம்'

'என்ன கொழும்புக்கோ...?'

'ஓமடி பிள்ளை...ஒருகிழமை பள்ளிக்கூட லீவெல்லே - மூத்த மகளிட்டை போகப் போறன்

அவளும் அடிக்கடி வரச்சொல்லிகோல் எடுத்தபடி... அதுதான்.'

'ஏன் மாமி கொழும்புக்குப் போறதுக்கு காசு ஏதாவது தேவையோ...?'

' அப்பிடி இல்லை மாலினி...வீட்டுத் திறப்பை உன்னட்டை தரப்போறன் பிள்ளை. எப்பிடியும் நாங்கள் திரும்பிவர நாலைச்சு நாளாகும். அதுவரைக்கும் நீதான்...'

'அதுக்கென்ன மாமி தந்திட்டுப் போங்கோ... இரவிலை லயிற்றைப் போட்டிட்டு வந்தாச் சரிதானே மாமி'

'ஓமடி பிள்ளை. அதோடை பிள்ளை எங்கடை ஜிம்மிக்கு சாப்பாடுபோட வேணும்

அதுக்கு மச்சந்தான் வேணுமெண்டில்லை எதுவும் சாப்பிடும். மற்றது ஒண்டு சொல்ல மறந்திட்டன் பிள்ளை சாடியளிலை வைச்சிருக்கிற பூக்கண்டுகளோடை மற்ற மரங்களுக்கும் கொஞ்சம் தண்ணியும் விடவேணும் பிள்ளை கோவிக்கிறியோ எல்லாத்தையும் தலையிலை போடுறனெண்டு'.

'உதிலை என்னமாமி கோவிக்கிறத்துக்கு இருக்கு.... உங்களுக்குச் செய்யாத உதவியே. கவலைப்படாதேங்கோ மாமி. நீங்கள் வரும் வரைக் கும் முடிஞ்ச வரைக்கும் வீட்டை பாக்கிறன்.'

'அதோடை பிள்ளை ஒண்டைச் சொல்ல மறந்து போட்டன்.புதன் கிழமையளிலை இந்தப்பக்கம் குப்பைக் காரங்கள் கட்டாயம் வருவாங்கள். வெளியிலை நாங்கள் உரபாக்கிலை போட்டு வைச்சிருக்கிற குப்பையளை மறக்காமல் அவங்களிட்டை கொடுக்கவேணும்...அதுதான்.'

'ஓம் மாமி-நாங்களும் போடத்தானே வேணும். அதோடை உங்கடை குப்பையளையும் போடுறது பெரிய வேலையே மாமி.? இப்ப திறப்புகொண்டு வந்தனீங்களோ...இல்லை..'

'இல்லைப் பிள்ளை நாளைக்குகாலமை போகேக்கைதாறன். இப்பபோட்டுவாறன் பிள்ளை'எனச் சொன்னமாமிஅங்கிருந்து அகன்று சென்றாள்.

அன்று புதன் கிழமை,எங்கள் பகுதியிலுள்ள குப்பைகள் அகற்றும் ரக்ரரின்சத்தம் கேட்டது. எனது வீட்டுக் குப்பைகளடங்கிய பாக்கை தூக்கியெடுத்து வீட்டுவாசலில் வைத்துவிட்டு,கமலம் மாமிவீட்டுத் திறப்புகளை எடுத்துக்கொண்டுபோய்

வீட்டு வாசல் கதவைத் திறந்து, விளக்கை அணைத்துவிட்டு நின்றவேளை, ஜிம்மிபலமாகக் குலைக்கும் சத்தங் கேட்டு எட்டிப் பார்த்தேன்.

கேற் வாசலடியில் நாலைந்துபேர் நின்றபடி 'நாங்கள் டெங்கு செக் பண்ணவந்திருக்கிறம். நாய் கடிக்குமோ உள்ளே வரலாமோ' எனக் கேட்டபடி எனது பதிலையும் எதிர்பாராமல் உள் நுழைந்து டெங்கு பரிசோதனையில் வெளிப்பகுதி யெல்லாம் புரட்டி எடுத்துக்கொண்டிருந்தனர்.

எனக்கு மனம் திக்குத் திக்கென அடித்தது.

ஏதாவது சிரட்டையள்,யோக்கட் கப்புகளுக்கை கொஞ்சம் தண்ணி நிண்டாலும் பரிசோதிக்க வந்தவர்களுக்கு அதுவே காணும் டெங்கு நுளம்பு இல்லாவிட்டாலும் அவர்களது விசித்திரக் கண்களுக்கு டெங்கு நுளம்பு நெளிஞ்சு நெளிஞ்சு மேலே வரும்.

நல்ல காலத்துக்கு அப்படியொன்றும் அவர்களது கண்களுக்குத் தென்படாததால் வெளியேற ஆயத்தமான போது திடீரென ஒரு அதிகாரி 'அக்கா... வீட்டிலை பிறிஜ் இருக்கோ?'என்றார். நான் ஓம் எனச் சொல்லிவாய் மூடும் முதலே இருவர் வீட்டின் உள்ளே பாய்ந்து, ஒருஆள் வீட்டு விறாந்தை மூலையில் இருந்த பிறிஜ் அருகே போய் அதனைத் திறந்தான். குப்பென ஒரு மணம் எனச் சொல்ல முடியாது பிணநாற்றம். 'என்னக்கா உங்கடை வேலை... ஏதோ மீனோ இறைச்சியோ வைச்சிட்டு பிறிஜ்சை போடாமல்; விட்டால்... என்ன ஆக்களப்பா ஒரே..பிணநாத்தம்.'என திட்டிவிட்டு, பிறிஜ்சின் கதவைதடாரென கோபத்துடன் அடித்து சாத்திவிட்டு 'இஞ்சைபாருங்கோ அக்கா உடனடியா உள்ளை இருக்கிற தெல்லாத்தையும் அள்ளிக் குப்பையிலை போட்டிட்டு துப்பரவாக்குங்கோ.அடியிலை ஒரே தண்ணியா நிக்குது..டெங்கு நுளம்பு கட்டாயம் இருக்கும்' எனச் சொன்னதும் எனக்கு பயமாயிருந்தது ஏதும் எழுதித் துலைச்சால்..?

நல்ல காலத்துக்கு மேலும் அங்கு நிற்க முடியாத அவலத்தில் மூக்கைப் பொத்தியபடி என்னை ஒரு முறைப்பு முறைச்சபடி விட்டால் காணுமெண்டவிதத்தில் வெளியேறிச் சென்றனர்.

இந்த வேளை பார்த்து குப்பை சேகரிக்கும் ரக்ரர் சத்தம் கேட்டதை அவதானித்த நான், மூக்கை மூடி ஒரு துணியால் கட்டியபடி பிறிஜ்சைத் திறந்து நாத்தமடித்துக் கொண்டிருந்த தயிர் சட்டியையும், அழுகி ஒழுகிக்கிடக்கும் மரக்கறிபாக்கையும் எடுத்து ஒரு பெரிய பையில் போட்டு இறுக்கக் கட்டியெடுத்து வெளியேயுள்ள குப்பை பாக்கில் கொண்டுபோய் போட்டு,அதனை குப்பை யேற்றும் ரக்ரர் காரரிடம் ஒப்படைத்து ஒரு பெரு மூச்செறிந்து நிமிர்ந்தேன்.

கமலம் மாமியும்,மகள், பேரப் பிள்ளைகளும் அடுத்த நாள் வியாழன் மாலை கொழும்பிலிருந்து திரும்பவும் வந்து விட்டதை அறிந்தநான், அவர்களது வீட்டுத் திறப்பை ஒப்படைக்க அங்குசென்றேன்.

டெங்குக்காரர் வந்ததும்,பிறிஜ்சை அவர்கள் திறந்து பார்த்ததையும் விலாவாரியாக நான் சொல்லி முடித்துவிட்டு, 'மாமி, நல்ல காலத்துக்கு குப்பைரக்ரர் காறங்கள் வந்ததாலை, பிறிஜ்சுக்குள்ளை வெடில் நாத்தமடிச்ச தயிர் சட்டியையும்,அழுகி ஒழுகிக் கிடந்த மரக்கறி பாக்கையும் அள்ளிகட்டி எடுத்துக்கொண்டுபோய் வெளியிலை இருந்த குப்பைபாக்கிலை போட்டு குப்பைரக்ரர் காரரிட்டை குடுத்திட்டன்' என மிகுந்த கெட்டித்தனத்துடன் மாமியிடம் சொல்லிட்டு மாமியைப் பார்த்தேன்.

'எல்லாம் போச்சு...எல்லாம் போச்சு' என தலையிலடித்த மாமி மயங்கி தரையில் சரிந்தாள்.

எனக்கோ,மகள் ரேவதிக்கும் கூட ஒன்றுமே புரியவில்லை.

'கொழும்பாலை இங்கை வரும் வரை அம்மா எல்லாரோடையும் நல்லதாசிரிச்சுக் கதைச்சுத்தானே வந்தவ' என மகள் ரேவதி எனக்குச் சொல்லி அழுதுகொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்தமாமி ' கொழும்பாலை வந்தகளைப்பு அதுதான்...'

எனச் சமாளித்துவிட்டு,மகளைப் பார்த்து ' பிள்ளை எனக்கு கொஞ்சம் கோப்பி போட்டுட்டுவா..பிள்ளை எனக்கு களைப்பாயிருக்குது' எனச்சொல்லி மகளை அனுப்பிவிட்டு, எனக்குச் சொன்ன கதையைக் கேட்டு எனக்கும் மயக்கமாக வந்தது.

பின்னை மயக்கம் வராமல் என்னதான் செய்யும்? கொழும்புக்குப் போகமுதல் மாமி தனது எல்லா நகைகளையும் போட்டுக்கொண்டு போகப் பயந்து, தனது ஒரு சோடிக் காப்பு, இரட்டைப் பட்டுச் சங்கிலி, இன்னும் சின்னச்சின்ன நகைகளை ஒரு லேஞ்சியில் போட்டு முடிந்து, அலுமாரிக்கை, சாமிப்படத்துக்குப் பின்னால்,சமயலறைக்துள் இருந்த மிளகாய், கோப்பி டப்பாக்களுக்கை ஏதாவது ஒன்றில் வைத்தால் தற்செயலாய் கள்ளங்கள் இரவிலை நுழைஞ்சால் முதலில் அது களைத்தான்

ஆராய்வாங்கள் எனப் பலமாக யோசித்துவிட்டு, கள்ளன்கள் ஆராய்ந்து பார்க்காத ஒரு இடத்தில் அவற்றை மறைத்து வைக்க எண்ணி, முதல் நாள் வாங்கிவைத்திருந்த மரக்கறிகள் நிறைந்த பொலித்தீன் பையில் அவற்றை மறைத்து வைத்து பிரிஜ்சின் அடியில் போட்டுவிட்டுப் போனதையும்,கொழும்புக்குப் போவதற்கு முதல் நாள் ராத்திரிபலத்த இடி மின்னல் மழையாயிருந்ததால் மகள் பிரிஜ்சை நிறுத்திவைத்து விட்டு மீண்டும் அதை போட மறந்து பயணம் செய்ததாலையும் வந்த வினைதான் என,கமலம் மாமிசொன்ன கதையைக் கேட்டு எனக்கு அழுவதா சிரிப்பதா எனத் தோன்றவில்லை.

பாவம் மாமி இழந்த ஆறேழு பவுண் நகைகளையும் நினைக்க எனக்கு கவலையாய் இருந்தது. நன்மை செய்யப்போய் இப்பிடியெல்லாம் நடக்குமெண்டு ஆர் நினைச்சது...

இப்ப பவுண் விக்கிற விலைக்கு...!

அழுது கொண்டிருந்த மாமியை எப்படித் தேற்றுவது?

'உன்னுடையது எதையிழந்தாய்...? எதற்காக நீ அழுகிறாய்..?' என்ற கீதாசாரத்தின் வரிகள் தான் எனக்கு அந்த வேளை ஞாபகத்தில் உதிக்க அதனை மாமிக்குப் பிரயோகிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி தோன்றவில்லை.

பிரான்ஸ்



பிரான்ஸில் இமானுவலின்

# ஆட்சி கவிழ்ந்தது

அரசியல் நெருக்கடியால் பிரான்ஸில் ஆட்சி கவிழ்ந்துள்ளது. பிரான்ஸ் பிரதமர் மைக்கேல் பார்னியர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அடுத்தே, ஆட்சி கவிழ்ந்துள்ளது.

கடந்த 60 ஆண்டுகளில் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு மூலம் பிரான்ஸ் அரசாங்கம் கவிழ்க்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

பிரான்ஸில் ஏற்பட்டுள்ள கடும் நிதி பற்றாக்குறை காரணமாக, அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டு, வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 577 உறுப்பினர்களில் 331 பேர் பார்னியர் அரசுக்கு எதிராக வாக்களித்தனர்.

இதனால் பிரான்ஸில் ஆட்சி கவிழ்ந்துள்ளது. இது ஜனாதிபதி இமானுவல் மேக்ரானுக்கு கடும் பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது.



மேலும், பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரனும் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் பெண்கள்

# மருத்துவம் படிக்க தடை

ஆப்கானிஸ்தானில், பெண்கள் மருத்துவம் படிக்க, தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில், 2021ஆம் ஆண்டு முதல் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. இங்கு, பெண்கள் சிறுமிகளுக்கு ஆடை கட்டுப்பாடுகள், கல்வி கற்க, வேலைக்குச் செல்லத் தடை, பொது இடங்களுக்கு ஆண்களின் துணை இல்லாமல் செல்லவும் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை தலிபான் அரசு விதித்து வருகிறது.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் தாதியர் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளை பெண்கள் பயில்வதற்கு தாலிபான் அரசு தடை விதித்துள்ளது.

இந்த தடைக்கு, அந்நாட்டு கிரிக்கெட் வீரர் ரஷித் கான் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# நாசாவுக்கு புதிய தலைவர் நியமனம்

அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (நாசா அமைப்பு) அடுத்த தலைவராக, ஜாரெட் ஈசாக்மேன் என்பவரை அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட். டிரம்ப் நியமித்துள்ளார்.

“ஷிப்ட்4” என்ற இணைய பணபரிமாற்ற நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான ஜாரெட் ஈசாக்மேன், கோடீசுவரராவார்.

இது குறித்து டிரம்ப் கூறும்போது, “ஒரு நிறைவான வர்த்தக தலைவர், ஏழை பங்காளர், விமானி மற்றும் விண்வெளி வீரரான ஜாரெட் ஈசாக்மேனை நாசாவின் நிர்வாகியாக நியமிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

“நாசா அமைப்பின் கண்டுபிடிப்பு மற்றும் உந்துதல், விண்வெளி அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றில் அளப்பரிய சாதனைகளுக்கான வழிகளை ஏற்படுத்துவது மற்றும் கற்று கொள்வது ஆகியவற்றை ஜாரெட் வழி நடத்தி செல்வார்”என கூறியுள்ளார்.



புதுடெல்லி

# எதிர்க்கட்சிகள் தொடர் அமளி

எதிர்க்கட்சிகளின் அமளியால், மாநிலங்களவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமானது. அப்போது அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை, உத்தர பிரதேசத்தில் சம்பாவில் சமீபத்தில் நடந்த வன்முறை ஆகியவற்றை குறித்து விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் முடங்கின. பாராளுமன்றத்தில் குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், வியாழக்கிழமை (05) காலை 11 மணிக்கு பாராளுமன்றத்தின் இரு அவைகளும் கூடியது.

அப்போது - அதானி விவகாரம், வக்பு வாரிய சட்டத் திருத்தம், மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட பிரச்சினைகளை முன்வைத்து மாநிலங்களவை எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனை தொடர்ந்து மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் ஜகதீப் தன்கர் அறிவித்தார்.






அசாம்

அசாம் மாநிலத்தில்

# மாட்டிறைச்சிக்குத் தடை

அசாம் மாநிலத்தில், மாட்டிறைச்சிக்குத் தடை விதிப்பதாக, அம்மாநில முதலமைச்சர் ஹிமாந்த பிஸ்வா சர்மா அறிவித்துள்ளார்.

அசாமில் திருத்தம் செய்யப்பட்ட கால்நடை பாதுகாப்புச் சட்டம் 2021இன் படி, இந்துக்கள், ஜைனர்கள், சீக்கியர்கள் பெரும்பான்மையாக வசிக்கக் கூடிய இடங்கள் மற்றும் கோவில்களை சுற்றி 5 கிலோமீற்றர் சுற்றளவில் கால்நடைகளை அறுப்பதும், இறைச்சியை விற்பதும் குற்றமாகும்.

இந்தச் சட்டத்தை திருத்தி, புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதாக அசாம் முதல்வர் ஹிமாந்த பிஸ்வ சர்மா தெரிவித்துள்ளார்.

அதன்படி, அசாம் மாநிலத்தில் உணவகங்கள், விடுதிகள், பொது இடங்களிலும் மாட்டிறைச்சி - சமைப்பதற்கும் உண்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையை மீறுபவர்களுக்கு, 3 முதல் 8 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் 3 முதல் 5 இலட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சி தடைக்கு அசாம் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# இந்தியாவை வீழ்த்துமா அவுஸ்திரேலியா?

அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது அடிலெய்ட்டில் பகலிரவுப் போட்டியாக இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியா அபார வெற்றி பெற்ற நிலையில் அழுத்தத்தில் காணப்படும் அவுஸ்திரேலியா, முதல் போட்டியில் தமது சிறந்த வீரரான ஜொஷ் ஹேசில்வூட்டை காயத்தால் இழந்தமை பின்னடைவாகக் காணப்படுகிறது.

ஹேசில்வூட்டை ஸ்கொட் போலண்ட் அணியில் பிரதியிடுகின்ற நிலையில அவரையும் விட துடுப்பாட்டவீரர்களே அதிகம் கவனம் பெறுகின்றனர். மர்னுஸ் லபுஷைன், ஸ்டீவன் ஸ்மித், உஸ்மான் கவாஜா ஆகியோர் ஓட்டங்களைப் பெற வேண்டியவர்களாக உள்ளனர்.

மறுபக்கமாக இந்திய அணியைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, ஷுப்மன் கில் ஆகியோர் அணிக்குத் திரும்பி தேவ்டுட் படிக்கல், துருவ் ஜுரேலை அணியில் பிரதியிடுகின்றனர்.

ஷர்மா அணிக்குத் திரும்பியபோதும் லோகேஷ் ராகுல் முதல் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டதால் அவர் மத்திய வரிசையில் களமிறங்கவுள்ளார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல் – நியூகாசில் போட்டி

4. யுனைட்டெட்டை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் வியாழக்கிழமை (05) நடைபெற்ற அவ்வணிக்கும் லிவர்பூலுக்குமிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

லிவர்பூல் சார்பாக மொஹமட் சாலா இரண்டு கோல்களையும், கேர்ட்டிஸ் ஜோன்ஸ் ஒரு கோலையும் பெற்றனர். நியூகாசில் சார்பாக அலெக்ஸான்டர் இஸாக், அந்தனி கோர்டன், பேபியன் ஸ்கார் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.



ஆர்சனல் சார்பாக, ஜுரியன் டிம்பர், வில்லியம் சலிபா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# இரண்டாமிடத்துக்கு முன்னேறிய ஹரி ப்றூக்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஹரி ப்றூக் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது போட்டியில் 171 ஓட்டங்களைப் பெற்றதையடுத்தே நான்காமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில் 183 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் தெம்பா பவுமா, 24ஆம் இடத்திலிருந்து 14 இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. ஹரி ப்றூக், 3. கேன் வில்லியம்சன், 4. யஷஸ்வி ஜைஸ்வால், 5. டரைல் மிற்செல், 6. றிஷப் பண்ட், 7. கமிந்து மெண்டிஸ், 8. ஸ்டீவன் ஸ்மித், 9. சௌட் ஷகீல், 10. தெம்பா பவுமா.

இந்நிலையில் இலங்கைக்கெதிரான குறித்த டெஸ்டில் 11 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் மார்கோ ஜன்சன், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 28ஆம் இடத்திலிருந்து 19 இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,



ஜஸ்பிரிட் பும்ரா, 2. ககிஸோ றபாடா, 3. ஜொஷ் ஹேசில்வூட், 4. இரவிச்சந்திரன் அஷ்வின், 5. பற் கமின்ஸ், 6. இரவீந்திர ஜடேஜா, 7. நேதன் லையன், 8. பிரபாத் ஜெயசூரிய, 9. மார்கோ ஜன்சன், 10. மற் ஹென்றி.

இதேவேளை சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையிலும் 12ஆம் இடத்திலிருந்து 10 இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை ஜன்சன் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. மார்கோ ஜன்சன், 3. இரவிச்சந்திரன் அஷ்வின், 4. ஷகிப் அல் ஹஸன், மெஹிடி ஹஸன்.




ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# பில்பாவோடம் தோற்ற மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், அத்லெட்டிக் பில்பாபோவின் மைதானத்தில் வியாழக்கிழமை (05) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தோற்றது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூட் பெல்லிங்ஹாம் பெற்றதோடு, பில்பாவோ சார்பாக அலெஜான்ட்ரோ பெரென்குயெர் ரெமிரோ, கொர்கா குருஸெட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 06, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.